
# பார்வை



தேயிலை செழிக்கும் மலை;
தென்னைகள் விளைப்பதொடு,
போயிலை தழைக்கும் நிலம்;
போதிய கிடைக்கும் நகர்;
வாயிலிற் கிடக்கிறது,
வாழை; பல நூறு கலை
தோய, வளரும் தமிழை
ஆய, விழா வாயிரமே!

ஈழ நாடே -எழல்- சூழும் நாடே!

PARVAI ஆவணி AUGUST 1988

**OPEN-** **7 DAYS**
**6 TO 23**

# VAN HORNE BAGEL

இலங்கை
இந்தியா
கனடா

ஆகிய நாட்டு
உணவுப் பொருட்களை
குறைந்த விலையில்
வாங்குமிடம்

வன் கோர்ண்
பேகல்

எல்லா வகையான
பாண் வகைகளும்,
பேகல், சிகறெற்
மலிவாகப்
பெறுமிடம்

வன் கோர்ண்
பேகல்

இன்றே நாடுங்கள்

**$ 10.00**
**BONUS**
$100.00க்கு
சாமான்
வாங்கு
வோர்க்கு

குறைந்த
விலையில்
சிறந்த
இடம்

வன் கோர்ண்
பேகல்

உங்களுக்குத்
தேவையான
பேர்த்டே
கேக்குகள்
பீசா
ஓடருக்கு
செய்து
கொடுக்கப்படும்.

COTE STE CATHERINE

**SPECIAL**

BEER (12) $10-75
RICE 10Kg $7-49
MILK 4L $3-59

அரிசி
மா
மிழகாய்த்தூள்
வெங்காயம்
உருளைக்கிழங்கு
எண்ணெய்
பருப்பு
புளி
தேங்காய்
முருங்கக்காய்
கறிவேப்பிலை
தேசிக்காய்
மற்றும் பல
எம்மிடமுண்டு.
எல்லா வகையான
குளிர்பானங்களும்
மலிவாகப்பெறுமிடம்
'வன் கோர்ண்'
பேகல்

**5497 VICTORIA**

DUPUIS

METRO
COTE
STE
CATHERINE

பாண் போடத்தெரிந்தவர்களுக்கு
வேலை வாய்ப்புண்டு
தொடர்பு கொள்ள வேண்டிய
இலக்கம் 340-1312.

$40க்கு மேல்
வாங்குவோர்க்கு
இலவச விநியோகம்
6மணிக்குப்பின்
செய்து
கொடுக்கப்படும்.

# கண்-2 பார்வை-5

VA (ZH)LUM THAMIL
P.O.BOX 73505
509 ST.CLAIR AV. W.,
TORONTO, ONTARIO
M6C 1C0 CANADA

## ஆவணி 1988

வணக்கம்!

வெறும் பொருளாதாரக் காரணங்களுக்காக வெளிநாடுகளுக்கு உழைக்கப்போன காலம் போய் உயிர் வாழ்வதற்காய் அந்நிய தேசங்களில் இன்றைய காலங்களில் தஞ்சம்புகுந்தோம்.

குறுகிய காலத்தில் பெரும் எடுப்பில் பல்லாயிரம் பேர் கனடாவில் குடியேறினோம். ஈழத்தமிழர் அகதியாக வாழும் இந்தியாவிலோ அல்லது மற்றும் ஐரோப்பிய நாடுகளிலோ இல்லாத சில சலுகைகள் இங்கு எங்களுக்கு கிடைக்கின்றது. குறிப்பாக கல்வி

படிப்பொன்றே பெரிய மூலதனமாக கொண்ட தமிழ்ச் சமூகத்தை சேர்ந்த நாம் இதை பயன்படுத்துகின்றோமா?

ஈழத்தில் கல்வியைத் தொடரமுடியாமல் வந்த மாணவர்கள் இன்று இங்கு வாய்ப்புகள் பல இருந்தும் வேலை பணம் என அலைகின்றார்கள். பணம் அவசியமானது என்பதில் இரு கருத்தும் இல்லை. ஆனால் கல்வி?

நாம் வாழும் இந்நாட்டில் கைத்தொழில் காலம் போய் மின்கணனி தொழில் நுட்பக்காலம் நடக்கின்றது. படிப்பொன்றுதான் இங்கு நிரமான வாழ்வைத் தரும்.

யுத்தத்தால் அழிந்து தேவைகளால்நிறைந்து இருக்கும் எமது தேசத்தைக்கட்டியெழுப்ப பணத்தை விட கல்வி கற்றவர்கள் முக்கியம் என்பதை பார்வை வலியுறுத்துகின்றது.

— ஆசிரியர்
செல்வம்

# உங்கள் சேவையில் 'கான்பை'

## மலிவு... மலிவு...மலிவு... மலிவு...மலிவு...


உங்கள் தேவை
எங்கள் சேவை

| | |
|---|---|
| 10 கிலோ புழுங்கலரிசி | $7.99 |
| 40 கிலோ புழுங்கலரிசி | $32.99 |
| வறுத்த அரிசி மா 1 கிலோ | $1.99 |
| LONDON மைசூர் பருப்பு 2 கிலோ NO.1 | $2.99 |
| பனம்பழ ஜாம் | $2.29 |
| இலங்கை குத்தரிசி 1 கிலோ | $1.79 |
| இலங்கை குத்தரிசி 10 கிலோ | $15.00 |

# CAN BUY

5692 VICTORIA AVE MONTREAL
TEL: 345-8622

சகல விதமான இறைச்சிவகைகளும்
எம்மிடம் உண்டு




உங்கள்
தளபாடங்களை
ஏற்றி இறக்க
எங்களையே நாடுங்கள்!

ஆசிரியர்: செல்வம்

இணை ஆசிரியர்: ஜெயராஜ்

மின்கணனி அச்சுப்பதிப்பு: G.R.கென்னடி

# தமிழர் ஒளி வெளியீடு

வடிவமைப்பு: ஸ்கந்தன், யோகன்



தமிழர் ஒளி
THAMILAR OLLI

**THAMILAR OLLI ASSOCIATION INC.**
1396, St. Catherine (West)
Suites 226, 227 & 230
Montreal, Que.
CANADA
H3G 1P9
Tel. (514) 866-0376

## முத்தமிழ் விழா

தமிழ்த்தென்றலின் 4வது நிறைவையொட்டி இடம் பெறும் இம்முத்தமிழ் விழாவில் நாட்டிய நாடகம், மெல்லிசை, வில்லுப்பாடல் இன்னும் பல சுவையான அம்சங்கள் இடம் பெறும். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

காலம்: 03.09.1988
இடம்: PLACE ST-HENRI மண்டபம்
நேரம்: பிற்பகல் 5 மணி

# அதிகாலையைத் தேடி!

செழியன்

கிணற்றடியில்
கிளைகள் பரப்பிப்பூத்திருக்கும்
வேப்பமரத்தில்
சில நாட்களாகவே
ஒரு குஞ்சுக்காகம் கரைகின்றது!

எங்கள் தேசத்துமனிதரைப்போலவே
என்ன துயரம் நேர்ந்ததோ?

வாழ்வில் இன்னமும்
எஞ்சியே உள்ளநாட்களைக்கழிக்கும்
அம்மா,
தம்பி வரப்போகிறான் என
தனது நம்பிக்கையைத் தெரிவிக்கின்றாள்.

ஏழு ஆண்டுகளின் பின்
மறுபடியும் புறப்பட்டு
சொல்லாமலே போய்விட்ட கூட்டத்தின் நடுவே
எங்கள் கடைசித்தம்பியும் போய்விட்டான்.

இருள் சூழ்ந்த ஒரு நேரம்
ஊரும் அடங்கிப் போய்விட
வானத்து நட்சத்திரங்களின் மறைவில்
எங்கள் தேசத்தின் புதல்வர்களில் ஒருவனாய்
அவன் வரக்கூடும்
(புதிதாய் அரும்பும் மீசையும் இருக்குமோ?)

அந்நியர்களால் தொடர்ந்து
கறை படியும் தேசம்.
தெருக்களில் நிர்வாணமாய்
புதிய துப்பாக்கிகளின் நடமாட்டம்.

காற்று
எங்கள் கடலிலும் மண்ணிலும்
யன்னலைக் கடந்து எங்கள் அறைகளிலும்
வீசிக் கொண்டுதான் இருக்கிறது.

வாழ்வதற்காக நாம்
போராடியாக வேண்டும்

ஒரு அதிகாலையில்
பனி படர்ந்த புற்களின் மீது
புதிய தலை முறையொன்று
தனது குஞ்சுப்பாதங்களைப் பதித்து எழும்

வயல்களில் உழவன்
குரல் எடுத்துப் பாடுவான்

எங்கள் தேசத்தின் மனிதர்களும்
நிமிர்ந்தே செல்வர்

நான் கண்டதை-அதாவது உலகத்தால் எனக்குக் காட்டப்பட்டதை, நான் கேட்டதை-அதாவது வாழ்க்கை எனக்குச் சொன்னதை நான் உலகத்துக்குத் திரும்பவும் காட்டுகிறேன். அதையே திரும்பவும் உங்களிடம் சொல்லுகிறேன். அது அசிங்கமாக, அது அற்பமாக, அது கேவலமாக அல்லது அதுவே உயர்வாக, உன்னதமாக எப்படி இருந்த போதிலும் எனக்கென்ன பழி? அல்லது புகழ்?

ஜெயகாந்தன்

# இங்கொரு தமிழன்

## Double doctorate for Sri Lankan



Dr.A.J.V.Chandrakanthan


Dr. A.J.V. Chandrakanthan, from Jaffna , Sri Lanka, was awarded a double doctorate on May 19--in Philosophy from the University of Ottawa, and in Theology from the St. Paul University in Ontario. He is the first South Asian to obtain a double doctorate.

His inter-disciplinary doctoral research was entitled "Attempts at Contextualization of the Church in Sri Lanka: A Study of the Official Documents of the Catholic Bishops' Conference of Sri Lanka 1965-1985."

Commenting on the thesius, Prof. Achiel Peelman, Dean of the Faculty of Theology, said Chandrakanthan's research has unearthed significant theological insights to the understanding of vaious dimensions of inter-religious dialogue in South Asia from its philosophical and phenomenological dimensions.

Prof. A.J. Wilson of the University of New Brunswick who served as an external examiner commended the dissertation as a valuable contribution to both social and religious sciences in South Asia. The thesis project was directed by Prof. Richard Hardy, a scholar in Asian Theology.

Dr. Chandrakanthan earned his M.A. and M.Phil. at Jnana Deepa University in Pune, India. He taught courses on Eastern Religions at St. Paul Universirty in Ontario. He is presently associate professor of Systematic Theology at the Loyola Campus of Concordian University in Montreal.



Volume IV No. 5 Montreal
June/July 1988

Asian

# நாமெல்லாம் தமிழர் — சம்பு —

களம் பல கண்ட தமிழர் கனடாவில் வாழ்வதாய்
கழகங்கள் அமைத்து வரும் கனேடியத் தமிழர்—நாம்
கழங்கமற்ற தனிமொழிகள் கருத்து மிகப்பேசுவதாய்
கனவு மட்டும் காண்கின்றோம்.
கனடாவில் கழகங்கள் அமைகின்ற இடமெல்லாம்
கடுகதியாய் கற்றவர் நாம் "சிற்றி" மாறி அலைகின்றோம்.
"சிற்றி" மட்டும் மாறி அலையவில்லை
சிறப்பையும் சேர்த்துப்பெற்றிடவே
சிறகடித்துப் பறக்கின்றோம்.
சிறி இலங்கை தமிழர் என்றும் சிரிக்காது சொல்கின்றோம்.
ஈழத்தை இழந்து வர இம்மி கூட இஷ்டமில்லை
என்றாலும்
எரிச்சல் வெறுப்புடன்தான் ஈழமதை விட்டு வந்தோம்.
ஈழமதில் இனி இருந்தால் எம் சுகங்கள் கெட்டு விடும் என்றே
ஈழமொன்றே இனி எம் இலட்சியம் என்று கூறி விட்டு
எவ்வளவுதான் ஆனாலும் எங்காவது போகவெண்ணி
இங்கு வந்து சேர்ந்து விட்டோம்
எமக்கிருந்த மொழிப்பற்று எவரிடத்திலிருந்ததுவோ?
தனி நிலத்தில் உள்ள பற்று தனிநாடதனிலுண்டோ?
கனடாவில் தளம் தேடும் தமிழர் நாம்
தமிழீழம் பார்ப்போம் தனிநாடும் போவோம்
மன்னியுங்கள்
காப்புறுதியும் கனடாவில்
கல்வீடும் "ஸ்காபுறோவில்"
மீட்போம் மிஞ்சியுள்ள தமிழரையும்
மிகவிரைவில் முழுமுச்சாய் "ஸ்பொன்சரையும்" பண்ணிடுவோம்
குடும்பமாய் குடியேறி—வர
குறையிருக்கும் அலுவல்களை முடிக்கும்வரை
போற்றிடுவோம் கழகங்களை
"பேப்பர்" யாவும் கிடைத்துவிட்டால்
நாம் யாரோ நீ யாரோ
நாம் இப்போ இருக்கும் இடம்
தமிழ்ச்சனமே இல்லை. அப்பாடா இதுவன்றோ பெருமை
நாமெல்லாம் தமிழர்

# இலங்கை இந்திய கண்ணோட்டம்

கடந்த சித்திரையில் நாம் கூறியபடி தமிழ்நாட்டுத் தேர்தல் உடனடியாக நடாத்தப்பட மாட்டாதென தெரியவருகிறது. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளை மே மாதத்திற்கு முன்னர் அடக்கிவிட முடியுமென்ற நம்பிக்கையின் பேரிலேயே மே அல்லது யூன் மாதத்துள் தமிழகத் தேர்தல் நடாத்தப்படுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கொரிலாப் போராளிகளுடன் தாக்குப்பிடிப்பதில் இந்தியப் படையினர் பலத்த சிக்கல்களை எதிர்நோக்கியவண்ணம் உள்ளனர்.

இலங்கைப் பிரச்சனையைத் தீர்க்காமல் தமிழகத் தேர்தலை அறிவித்தால் பிராந்தியக் கட்சிகள், ஆளும் காங்கிரஸ் கட்சியையும் அதனுடன் கூட்டுச்சேரும் கட்சிகளையும் சிதறடிப்பது நிச்சயம். அகில இந்திய ரீதியிலும் பலத்த கண்டனத்திற்குள்ளாகியிருக்கும் டெல்லி அதிகாரிகளின் இலங்கை இராணுவ மற்றும் இராஜதந்திர நடவடிக்கையானது இன்று உலக ஸ்தாபனங்களினதும் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களினதும் அபிப்பிராயங்கட்கு உள்ளாகியிருப்பது இந்திய அரசுக்கு பலத்த தோல்வியென்றே கூறவேண்டும்.

இலங்கையிலும் கண்துடைப்பு மாகாண சபைத் தேர்தல்கள் நடாத்தப்பட்டு, பிரதான எதிர்கட்சியின் பகிஸ்கரிப்பால் கணிசமான தொகையான வாக்காளர்கள் தேர்தலில் பங்குபற்றாத நிலையில் பலவிதமான தில்லுமுல்லுகள், பலாத்காரங்கள், வாக்குறுதிகட்கு மத்தியில் நடத்தப்பட்டு ஆளுங்கட்சி வெற்றி பெற்றுள்ளது. பிரச்சனைக்குரிய வடக்கு கிழக்கு மாகாண சபைகட்கு தேர்தல் நடாத்தப்படாத போதிலும் தேர்தல் நடந்து முடிந்த மாகாணங்களிலும் சபை நடவடிக்கைகள் குழப்பமான நிலையிலேயே நடைபெற்று வருவதாக அறியப்படுகின்றது. காலங்காலமாக ஆளும் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரித்து வந்த முஸ்லீம் தமிழர் சிலர் தனிக்கட்சி

ஒன்றை ஆரம்பித்து நடந்து முடிவுற்ற தேர்தலில் வெற்றியும் பெற்று வரும் இவ்வேளையில், மலையகத்தமிழர்களின் பிரதிநிதியாக விளங்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜெயவர்தனா அரசால் ஏமாற்றப்பட்டு சுய இலாபத்திற்காகவும் தம் குடும்பத்தினரின் அரசியல் சலுகைகளுக்காகவும் மலையகத் தமிழர்களின் வாக்குரிமைகளை அடகு வைத்து வருவது துரதிஷ்டவசமானது. மலையகத் தமிழர்களின் ஆதரவு இல்லாவிடின் ஐக்கிய தேசியக்கட்சி பல மாகாண சபைகளில் தோல்வி அடைந்திருக்குமென்றே நம்பப்படுகிறது. கிடைத்துவரும் செய்திகளின்படி மாவட்ட சபைகட்கு நேர்ந்த கதியே மாகாண சபைகளுக்கும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக நிலைமையைப் பொறுத்த மட்டில் தி.மு.க அண்ணா தி.மு.க வின் ஜானகி மற்றும் ஜெயலலிதா அணிகள், இந்திரா காங்கிரஸ், சிவாஜியின் தமிழக முன்னேற்ற முன்னணி ஆகிய கட்சிகள் இப்போதே தேர்தல் பிரசாரத்தில் இறங்கியுள்ளன. அவைகள் தமிழக மக்களின் ஆதரவைக் கவருவதைவிட ஏனைய கட்சிகளுடன் ஏற்படும் கூட்டணியில் தமக்கு சாதகமான ஒரு நிலை தோன்ற வேண்டும் என்ற நோக்கிலேயே தம் பலத்தை தம் வருங்காலக் கூட்டணிக் கட்சியினருக்கு காட்டும் குறிக்கோளுடனேயே செயற்பட்டு வருகின்றனர்.

ஜெயலலிதா அணியும், இந்திரா காங்கிரசும் கூட்டணி அமைக்கும் நிலைமையே உள்ள போதிலும், முதல்வர் பதவி, சீட்டுக்கள் என்பவற்றில் சலுகைகளைப் பெறுவதற்காக பல ஊடல் நாடகங்களும் வீராப்புப் பேச்சுகளும் நடைபெற்று வருகின்றன. இலங்கைப்பிரச்சனை இருக்கு மட்டும் காங்கிரசுக்கு திராவிடக் கட்சியொன்றின் ஆதரவு தேவை. தனித்து போட்டியிட்டால், கருணாநிதி வெல்லும் சாத்தியத்தைக் காட்டி ஜெயலலிதா அணியினர், காங்கிரஸ் கூட்டு ஜெயலலிதா அணியினர்க்கு

சாதகமாகவே அமையக்கூடிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தலாம். அதேவேளையில் இலங்கைப்பிரச்சனை சமுகமாகத் தீர்க்கப்பட்டால் காங்கிரசின் செல்வாக்குக் கூடி தமக்கு அமைவான ஒரு கூட்டணியை உருவாக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாம். எனவேதான் அவர்கள் தேர்தலைத் தள்ளிப்போட்டு ஆளுனர் ஆட்சியை நீடித்துக் கொண்டு வருகின்றனர். அதே வேளையில் இலங்கைப் பிரச்சனையை தீர்ப்பதற்காக இலங்கையரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் பலவித தொடர்புகளை ஏற்படுத்தி அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இப்போதுள்ள நிலையையே நீடித்தால் இவ்வருட இறுதிக்குள் தேர்தல் நடைபெறமாட்டாதென கருதப்படுகிறது.

ஏனைய தமிழக கட்சிகளைப் பொறுத்தமட்டில் தி.மு.க தனித்தே தன் வழமையான தோழமைக் கட்சிகளான பார்வாட் புளொக், கம்யூனிஸ்ட் கட்சிகள், தமிழக முஸ்லிம் காங்கிரஸ். என்பவற்றுடன் போட்டியிடுமெனவும் ஜானகி அணி, சிவாஜி கூட்டு கட்டணி ஏற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஜனதா கட்சியினர் தி.மு.க வுடன் அல்லது ஜானகி அணியினருடன் சேரலாம். வி.பி. சிங்கின் அலகபாத் வெற்றி தேசிய எதிர்கட்சிகளுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும் தேசிய அளவில் அவர்களுக்குள்ள ஒற்றுமை ஏற்படாதவரை அவை தமிழகத் தேர்தலில் பலத்த பாதிப்பை ஏற்படுத்துமென எதிர்பார்க்க முடியாது.

தொகுப்பு - K.K.பாலன்

# மனப்புரட்சி



நாம் கடவுள் என்று தேடி அலைந்ததெல்லாம் நமது ஆசையின் நிழல்களன்றி வேறொன்றுமில்லை. கால விசாலத்தின் எல்லைகளைக் கடந்து, சாவின் நியதியை வென்று துன்பத்தின் அழுத்தங்கள் அகன்ற ஒரு நித்தியமான, சிரஞ்சீவியான பேரானந்தமான ஜீவிதத்தைக் கனவு கண்ட நமது விபரீதமான ஆசை கடவுளாகப் பிறந்தது.

யுகம், யுகமாய் நமக்குள், நமது மனக்குகை இருட்டினுள் நாமே வரைந்து விட்ட நிழலுருவங்களை, புனைந்து விட்ட பொய்மைகளை கண்டு கொள்வதாயின் நாமே நமக்கு ஒளியாக வேண்டும் என்கிறார் கிருஷ்ணமூர்த்தி. அவரது போதனை ஒரு புதுமையான சுயதரிசனக் கண்ணாடி.

# ஜே. கிருஷ்ண மூர்த்தி ஒரு அறிமுகம்

A. S. பாலசிங்கம்

யார் இந்த கிருஷ்ணமூர்த்தி?

கடவுள் என்றும், ஞானி என்றும், புத்தனின் அவதாரம் என்றும், அனுபூதி மான் என்றும், ஆன்ம யோகி என்றும், தத்துவதர்சி என்றும் நாம் பதிக்கும் சமூக முத்திரைகளுக்கும், நமக்குத் தெரிந்த சாதாரண அளவீடுகளுக்கும் அகப்படாத ஒரு அபூர்வமான மனிதர்.

அவர் யார் என்பதை வரையறுத் துக்கொள்வது கடினம். அப்படி வரித் துக்கொண்டு நாம் அவரைப் புரிந்து கொள்ளவும் முடியாது.

'அவர் யார்' என்ற கேள்விக்கு, அவர் யாருமற்றவர் என்பதுதான் பொருத்த மான பதில். ஏனென்றால் அவர் தனது சுயத்தை, ஆளுமையை, அகத்தின் முகத்தை அழித்துக்கொண்டவர்.

அவர் ஒரு அசாதாரண மனிதர். அழகான மனிதர்.

தொண்ணூறு ஆண்டுகள் வரை நம் மோடு இப்பூமியில் வாழ்ந்தார். இதில் எழுபத்தைந்து ஆண்டுகள்வரை நம்மோடு சதா கலந்துரையாடினார். போதித்தார். எழுதினார்.

மனித மனம்பற்றி, மனித உறவுகள் பற்றி, மனித விழிப்புணர்வுபற்றி, மனித விடுதலைபற்றி - மனித வாழ்வின் சகல சிக்கலான பரிமாணங்கள் பற்றியும் மிக வும் கனிவுடன், மிகவும் அக்கறையுடன், மிகவும் துல்லியமான தெளிவுடன், மிக வும் அழகான, அற்புதமான கவிதா மொழியில் பேசினார். எழுதினார்.

அவரது போதனைகள், எழுத்துக்கள், எல்லாவற்றையும் நாம் ஒன்றுசேர்த்து தொகுத்துப் பார்த்தால் அவை ஒரு பெரும் தத்துவார்த்தமாகவோ, கருத்துக் களஞ்சியமாகவோ அல்லது ஒரு ஆன்மீக தரிசனமாகவோ அமையமாட்டா. அவை அனைத்துமே நம்மை நோக்கி எறியப்படும் கேள்விகள்; நம்மோடு சேர்ந்து நடத்தப் படும் தேடுதல்கள்; நமது கனவுகளைக் கலைத்து, நம்பிக்கைகளை உடைத்து, விழிப் புணர்வைத் தூண்டும் விசாரணைகள். கிருஷ்ணமூர்த்தி நமக்கு எவ்வித தத்து வக்கோட்பாடுகளையும் நெறித்துவிட வில்லை. ஆன்மீக ஞானதரிசனத்தை அளித்துவிடவில்லை. உண்மைப் பொருளை கண்டுகொள்ள ஒரு மார்க்கத்தைக் காட் டவில்லை.

யுகம் யுகமாய் நமக்குள், நமது மனக்குகை இருட்டினுள், நாமே வரைந்து விட்ட நிழலுருவங்களை, புனைந்துவிட்ட பொய்மைகளை கண்டுகொள்வதாயின் 'நாமே நமக்கு ஒளியாக வேண்டும்' என்கிறார் கிருஷ்ணமூர்த்தி. அவரது போதனை ஒரு புதுமையான சுயதரிசனக் கண்ணாடி.

மனித குலம் இன்று தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் ஒரு பயங்கர அணு யுத்தத்தின் விளிம்பில் நிற்கிறது. உலகமா னது பிளவுபட்டு, மனித உறவுகள் சிதைபட்டுக்கிடக்கின்றன. வல்லரசுகள் என்றும், நாடுகள் என்றும், இனங்கள் என்றும், மதங்கள் என்றும், வர்க்கம் என்றும், சாதி என்றும், மனித இனம் சிதறுண்டு, முரண்பட்டு மோதுகிறது. தேசியவாதம், இனவாதம், மதவாதம் என்ற வெறிபிடித்த சித்தாந்தங்கள் வன் முறைக்கு தூபமிடுகின்றன. உலகின் பல முனைகளில் யுத்தம், போராட்டம், புரட் சிகள் வெடித்து மனிதனை மனிதன் அழித்துக்கொண்டிருக்கிறான். இவ்விதம் மனித வாழ்வு சீர்குலைந்து கிடப்பது ஏன்? மனித உறவுகள் சிக்குப்பட்டு குரோதமடைவது ஏன்? மனிதர்களிடை யே அன்பும், அமைதியும், ஒத்திசைவான வாழ்வும் செத்துப்போனது ஏன்? மனிதன் முழுமையோடு, நிறைவோடு, உள்ளும் புறமும் இசைவாக, அமைதியோடு, ஆனந்தமாக வாழமுடியாதா?

மனிதன் நாகரிகங்களைத் தோற்றுவித் தான். அவை அழிந்துபோயின. சாம் ராஜ்யங்களைக் கட்டி எழுப்பினான். அவை இடிந்து விழுந்தன. சமுதாய வடிவங்களை உருவாக்கினான். அவை சிதைந்துபோயின. மனிதன் மீண்டும் ஒரு உன்னதமான, புதுமையான சமுதாயத்தைக் கட்டி எழுப்ப விழைகிறான். சமுதாய அமைப்பை மட்டும், மீண்டும் மீண்டும் மாற்றி யமைத்துவிடுவதால் மனிதன் சுபிட்சம டைய முடியுமா?

தனிமனிதனுக்கு புறம்பான எல்லாம் வல்ல ஒரு சக்தியாக, தனிமனிதனை ஆட்டிப்படைக்கும் சக்தியாக, தனிமனித தனித்துவத்தை நசுக்கிவிடும் ஒரு சக்தியாக சமுதாய அமைப்பு இயங்கும்பொழுது அது மனித முழுமைக்கும் விடுதலைக்கும் வழிவகுக்குமா?

சமுதாயம் என்பதே சிக்கலான மனித உறவுகளைக் குறிப்பது அல்லவா? இந்த உறவு எனக்கும் உனக்கும் உள்ள உறவு. அவனுக்கும் மற்றவனுக்கும் உள்ள உறவு. தனிமனித உறவுகளின் ஒட்டுமொத்தமான சிலந்திவலைப் பின்னலாக சமூக அமைப்பு உருவகம் பெறுகிறது. தனிமனிதன் தனது மனவுலக இருட்டினுள் பாதை தெரியாது தடுமாறும்பொழுது, பொய்மைகளில் புதைந்து குழம்பும்போது, எனக்கும் உனக்குமுள்ள உறவுகளில் புரிந்துணர்வு இல்லாதபோது; அவனுக்கும் மற்றவனுக் குமுள்ள உறவுகளில் முரண்பாடு தலை தூக்கும்பொழுது சமுதாயத்தை மாற்றிய மைக்க விழைவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அக உலகத்தை அறவே உதாசீனம்செய்து, புற உலகத்தை, பொருளுலகத்தை மட்டும் சீரமைப்பதால் மனித வாழ்க்கை சிறப்புற முடியுமா?

இவ்விதம் கேள்விகளை எழுப்பும் கிருஷ்ணமூர்த்தி, முதலில் தனிமனிதன் தனக்குள், தனது மனவுலகில் ஒரு புரட் சியை செய்யவேண்டும் என்கிறார்.

"சமுதாயப் புரட்சியா னது தனிமனிதனிலிருந்து, தனிமனிதனின் உள்ளீடான அகவுலகப் புரட்சியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். தனிமனித னின் உள்ளீடான புரட்சி நிகழாமல், மன வமைப்பு மாற்றப்படாமல், தனி மனித னுக்குப் புறம்பாக, வெளியே நிகழும் எவ்வித புதுமையான சமூகப் புரட்சியும் உள்ளடக்கத்தில் உயிரற்றதாகவே இருக் கும். உயிர்த்துடிப்புள்ளதும் சிதைந்துபோ காததுமான ஒரு புதிய சமூக வடிவத்தைக் கட்டி எழுப்புவதாயின் தனி மனிதனின் மனவரங்கில் ஒரு புரட்சி நிகழ்வது அவசியம்" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

இந்த மனப்புரட்சியானது பிரக்ஞை யின் விழிப்புணர்வாக, பிரக்ஞையின் அடித்தளத்திலிருந்து வெடித்தெழ வேண் டும்.

நானே என்னைப் புரிந்துகொள்ளாத வரை, வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து கொள்ளாதவரை, பொய்மைகளின் இருண்ட சுவர்களுக்குள் நான் சிறைபட் டுக்கிடக்கும்வரை நான் மற்றவனைப் புரிந்துகொள்வது எங்ஙனம்? இந்த சமூ கத்தையும் உலகத்தையும் அறிந்துகொள் வது எங்ஙனம்?

இந்த சமூகமோ, உலகமோ என்னிட மிருந்து மாறுபட்ட ஒரு பூடகமான பொருளல்ல. நானே இந்த சமூகத்தையும் உலகத்தையும் சிருஷ்டித்துள்ளேன். இந்த சமூகமும் உலகமும் எனது சுயத்தின் அசிங்கமான வெளிப்பாடாக பொருளுரு வம் பெற்றிருக்கிறது. எனது ஆசைகள், எனது கனவுகள், எனது விருப்பு வெறுப் புகள், எனது மனப்புற்றிலிருந்து பாம்பு களாகச் சீறும் துவேஷங்கள், வெறிகள் எல்லாமே இந்த சமூக உலகத்தை, சமூக உறவுகளைப் படைத்திருக்கிறது. எனவே, நானே இந்த சமூகம்; நானே இந்த உலகம்.

நான் சிருஷ்டித்த இந்த சமூக உல கத்தை, நானுகவுள்ள இந்த சமுதாயத்தை, நானே மாற்றியமைப்பதானல் அந்தப் புரட்சி எனக்குள் தொடங்கப்படவேண் டும்; எனது மனவுலகக் களத்தில் அந்தப் போராட்டம் ஆரம்பமாக வேண்டும்.

இந்த உள்ளீடான மானசிக யுத்தத்தில் எனது விடுதலைக்கான ஆயுதம் எனது விழிப்புணர்வுதான். இந்த விழிப்புணர்வு வெளிச்சத்தில் எனது மனதில் வேஷங் களை, கோலங்களை நான் கண்டுகொள்ள வேண்டும். பொய்மைகளைக் கண்டுகொள் ளும்பொழுதுதான் உண்மை புலனுகிறது.

ஆன்மிக யாத்திரை என்றும் அகவுல கப் பயணம் என்றும், தியானம் என்றும் யோகம் என்றும், நமக்குள் ஒளிந்திருக்கும் ஆன்மத்தின் சூட்சமத்தை அறிந்துகொள் வதென்றும், நாம் உலகத்தைத் துறந்து, வாழ்க்கையைத் துறந்து, உறவுகளை அறுத்து, யுகம் யுகமாய் நடத்திய தேடுதலால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. நாம் கடவுள் என்று தேடி அலைந்ததெல்லாம் நமது ஆசையின் நிழல் களன்றி வேறொன்றுமல்ல. கால விசா லத்தின் எல்லைகளைக் கடந்து, சாவின் நியதியை வென்று, துன்பத்தின் அழுத் தங்கள் அகன்ற ஒரு நித்தியமான, சிரஞ்சீவியான, பேரானந்தமான ஜீவி தத்தை கனவு கண்ட நமது விபரீதமான ஆசை கடவுளாகப் பிறந்தது. இந்தப் பூமியில் ஆயிரமாயிரம் கோவில்களைக் கட்டி அதைக் குடியமர்த்தினோம். அர்த்த மிழந்த, அசட்டுத்தனமான நமது வாழ்க் கைக்கு ஒரு பிரமாதமான அர்த்தமாக, ஒரு அலாதியான நம்பிக்கையாக, கடவுள் என்ற கருத்துருவத்தை நாம் தழுவிக் கொண்டோம். நமது மனமோ கனவுல

கில், கற்பனையுலகில், நிதர்சனத்திற்குப் புறம்பான புராண உலகில் தூங்குகிறது இந்தப் புராதன மனதால், புளித்துப் போன பழைமையில் புதைந்திருக்கும் மனதால், காலம் காலமாகப் பொய்க ளால் வனையப்பட்ட மனதால், மூட நம்பிக்கைகளில் திளைத்துப்போன மன தால், சித்தாந்தங்கள் வேதாந்தங்களில் சிக்குப்பட்ட மனதால், கருத்துலகக் கோட்பாடுகளில் கட்டுண்ட மனதால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. நாம் ஒரு குருவை வரித்துக்கொண்டோ, ஒரு அன்மீக வழிகாட்டியைப் பின் தொடர்ந்தோ, ஆசிரமத்தில் தவமி ருந்தோ, மந்திரங்கள் ஓதி, பிரார்த்தனைகள் செய்து, அழுதுபுரண்டு ஆண்டவனை வேண்டியோ உண்மைப் பொருளை கண்டு கொள்ள முடியாது.

அறிவுப் பசியில் அலையும் நமது மனமோ கருத்துகளை விழுங்குகிறது. அனு பவத்தைத் தேடித் திரட்டுகிறது. ஞாட கப் பளுவை பெருக்குகிறது. நடமாடும் நூல்களாக, மற்றவர்களது செத்துப்போன கருத்துகளை சதா அசை போடும் இயந் திரமாக, எண்ணத்தின் ஆதிக்கத்தில் அடி மைப்பட்டுக் கிடக்கும் அறிவார்ந்த மனமும் உண்மையைக் கண்டுகொள் ளாது.

எண்ணத்தால், சிந்தனையால், அறி வால், அனுபவத்தால், மனிதன் காலம் காலமாய் வரைந்துகொண்ட கருத்துருவச் சித்திரங்கள் எல்லாம் பழைய மனதை, பயிற்றப்பட்ட மனதை சார்ந்தவை. இந்த பழைய மூளையத்தின் படிமங்களால் மெய்மையின் கதவுகளைத் திறக்கமுடியாது என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

"மனித வாழ்வில் எண்ணம் ஏன் இத்தகைய முக்கியத்துவத்தைப் பெறுகி றது என்று விசாரித்துப் பார்த்தீர்களா? மனதின் அனுபவக் கடலிலிருந்து ஓயாது அலைமோதும் கருத்துருவங்களாக, படி மங்களாக சதா மனதை உலைத்துக்கொண் டிருக்கும் இந்த எண்ணத்திற்கு நாம் ஏன் அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்? மிகவும் தந்திரமாக, மிகவும் நுட்பமாக, மிகவும் சாதுரியமாக இயங்கும் எண்ணமானது தன்னிச்சையில், தனக்கேற்றவாறு சகலத் தையும் திரிபுசெய்து கொள்கிறது. நமது உறவுகளிலெல்லாம் பிளவையும் முரண் பாட்டையும் தோற்றுவிக்கிறது. இன்பம் துன்பம் என்று வாழ்வனுபவத்தைக் கூறு போட்டு, எண்ணற்ற அனுபவக் கூறுகளை மனதின் நினைவறையில் குவித்துக்கொள் ளும் எண்ணமானது அந்த அனுபவக் கிடங்கிலிருந்தே மீண்டும் புனர்ஜென்மம் பெறுகிறது. வாழ்க்கைக்கு இந்த எண் ணத்தால் அளிக்கப்படும் விளக்கங்களும் வியாக்கியானங்களும் நேற்றைய, இறந்த கால அனுபவத்திலிருந்து பெறப்படுபவை தான். ஆகவே எண்ணமானது இறந்த காலத்தை சார்ந்தது. பழமையானது" என்று குறிப்பிடும் கிருஷ்ணமூர்த்தி, எண்ண அமைப்பின் முழு இயக்கத்தையும் கண்டுணர்ந்துகொள்வதுதான் சுயதரிச னத்தின், அகப் புரட்சியின் ஆரம்பம் என்கிறார்.

எண்ண அசைவின் மையமாக எனது சுயம் இயங்குகிறது. இந்த சுயம் என்றால் என்ன? நான் என்று எனக்குள்ளிருந்து எண்ணிக்கொண்டிருப்பவன் யார்? அவ நானிப்பவனாக, அனுபவிப்பவனாக ஆசைப்படுபவனாக, எனக்குள் என் அக மாக, அந்தரங்க ஆத்மாவாக, என் ஆளுமையாக, என் அகந்தையாக; ஆண வமாக இயங்கிவரும் எனது சுயம் எப்படித் தோற்றம்கொண்டது? இந்த உலகத்தில் எனக்கு எல்லாமே அதுவாக, அதற்காக வாழ்ந்து, அதற்காக அனுப வித்து, அதற்காக துயரப்பட்டு, அதை நான் நிரந்தரமான நானாக நம்பி, அலா தியான பிரியத்தோடு நான் வழிபட்டுப் போஷிக்கும் அந்த நான் - எனது சுயம், எனக்குச் சொந்தமானது எப்படி?

நான் பிறந்த கணத்திலிருந்து எனக் கொரு பெயர், எனக்கொரு சாதி, எனக் கொரு மதம் என்று எனது சமூகத்தின் சம்பிரதாயப் பொம்மையாக எனது சுயம் வனையப்படுகிறது.

எனது வாழ்வனுபவத்திலிருந்து, எனது நினைவுலகத்திலிருந்து எனது பாரம் பரியத்திலிருந்து, எனது பண்பாட்டி லிருந்து, நான் எதிர்கொள்ளும் புறவுலகத் தின் எண்ணற்ற அழுத்தங்களிலிருந்து எனது சுயம் கருவாகி, உருவாகிறது. எனது சுயத்தின் எலும்பும் சதையுமாக இருப்பதெல்லாம் எனது நினைவுகளின் நிழலுருவங்களன்றி வேறொன்றுமல்ல. எனது மனம் சுவீகரித்துக்கொண்ட

கோடானுகோடி படிமங்களின் மையத்தி லிருந்து எனது சுயம் வெடித்தெழுகிறது. ஆகவே நான் என்பதே ஒரு படிமம். ஒரு மையப் படிமம். காலத்தால் செத்த கருத்துருவங்களிலிருந்து, நினைவுகளின் கல்லறையிலிருந்து உயிர்பெற்று இயங்கும் ஒரு எண்ணம்.

"மிகவும் விழிப்புடன், கூர்மையான கவனத்துடன், கணத்திற்கு கணம் உனது எண்ண அசைவுகளை அவதானித்துப் பார். நீ அவதானிப்பதும் ஆராய்வதும் உனது எண்ணமாக இருந்தால் நீ எதையும் கண்டுகொள்ளப் போவதில்லை. உனது விழிப்புணர்வின் பிரகாசத்திலேயே நீ உன்னைக் கண்டுகொள்ள வேண்டும். உனது விழிப்புணர்வு கூர்மையாகி, உனது கவனம் முழுமைபெறும்பொழுது, அவதானிப்பவனாக, சிந்திப்பவனாக, பிரக்ஞையின் மையமாக இருந்துவரும் உனது சுயம் செயலிழந்து விடுவதை நீ கண்டு கொள்வாய். இவ்விழிப்பு நிலையில் மனமானது எண்ணத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அமைதியடைகிறது. எண்ண இயக்கத்திலிருந்து விடுதலையடைந்து, அமைதி கொள்ளும் மனதில் தான் அன்பும், அழகும், ஆனந்தமும் சாத்தியமாகிறது" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

வாழ்க்கை என்பதே ஒரு மாபெரும் இயக்கம்; ஒரு மாபெரும் சக்தி. நமது மனம், நமது எண்ணம், நமது உணர்வு, நமது ஆசைகள் எல்லாமே இந்த இயக்கத்தின், இந்த சக்தியின் வெளிப்பாடுகள் தான். நமது மனதில், எண்ணத்தில், உணர்வில், ஆசையில் பிணக்கும் போராட்டமும் தாண்டவமாடும்பொழுது நமது உறவுகளில் முரண்பாடு தலைதூக்கும் பொழுது இந்த சக்தி விரயமாகிறது. வீணாகிறது. மனித மனமானது விழிப்புணர்வுகொண்டு, தனக்குள் தெளிவு கண்டு, உள்ளும் புறமும் முழுமையான, அமைதியான, ஒத்திசைவான வாழ்வைத் தழுவிக்கொள்ளும் பொழுது எல்லையற்ற சக்தியாக அங்கு ஞானோதயம் பிறக்கிறது. என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

நமது பழைய மனம், பயிற்றப்பட்ட மனம் இறக்கவேண்டும். அந்த சாவிலிருந்துதான் புதிய மனம், புரட்சிகர மனம் பிறக்கமுடியும். அந்தப் புரட்சிகர மனமே முழு மனித விடுதலைக்கும் சமுதாய விடுதலைக்கும் வழிவகுக்கும் கிருஷ்ணமூர்த்தி போதிக்கும் மனப் புரட்சியின் சாராம்சம் இதுதான்.

-நன்றி புதுயுகம்-

பிரபஞ்சம் அனைத்திலும் நிறைந்து நிற்பதான சத்திய சொருபத்தை நேருக்கு நேராக ஒருவர் தரிசிக்க வேண்டுமாயின், மிகத் தாழ்ந்த உயிரையும் தன்னைப்போலவே நேசிக்க முடிந்தவராக அவர் இருக்கவேண்டும். அந்த நிலையை அடைந்துவிட ஆசைப்படுகிறவர் யாரும், வாழ்க்கையின் எந்தத் துறையிலிருந்தும் விலகி நின்றுவிட முடியாது. அதனாலேயே, சத்தியத்தினிடம் நான் கொண்டிருக்கும் பக்தி, என்னை ராஜீயத்துறையில் இழுத்துவிட்டிருக்கிறது. சமயத் துறைக்கும் ராஜீயத்திற்கும் எந்த விதமான சம்பந்தமுமே இல்லை என்று கூறுவோர், சமயம் என்பது இன்னதென்பதையே அறியாதவர்களாவர். இதைக் கொஞ்சமேனும் தயக்கமின்றி, ஆயினும் முழுப் பணிவுடன் கூறுவேன்.

மகாத்மா காந்தி

ஆவணி
முஹர்ரம் பிறை 16

# 14

ராகுகால 3.05—4.3?
சுபநேரம் 10.35—12.0

எளியவா என்று பலருடனும் பகைக்கும்
அரசன் தான் வலியவனுயினும் மெல்லிய
மயிலிறகை அளவின்றிச் சுமந்த
வண்டிபோல் கெடுவான்.
சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்த தினம்.
என். எஸ். கிருஷ்ணன் நினைவு தினம்.

க. நா. சுப்ரமணியம்

# என்.எஸ்.கிருஷ்ணன் நகைச்சுவையில் சமுதாய நோக்கு

மேதைகள் என்று சொல்லும்படியாக சிலர் தோன்றி அவர்கள் காலத்தை மீறிய சில செயல்களைச் செய்து காட்டும்போது அவர்களைச் சுற்றியுள்ள மக்கள் அவர்களைச் சரியாகப் புரிந்துகொள்கிறார்கள் என்பதோ, சரியாக மதிப்பிடுகிறார்கள் என்பதோ நிச்சயமாகச் சொல்ல முடியாத விஷயமாகவே இருக்கிறது. இது தமிழர்களிடையே மட்டுமல்ல; உலகத்தில் பல சமுதாயங்களிலும் நடக்கிற காரியம்தான்.

சமீப காலத்தில் தோன்றிய ஒரு மேதையாகிய என். எஸ். கிருஷ்ணன் என்பவர் சினிமா மூலம் தெரிய வந்தவராதலால் சற்றே அதிகமாகப் பரவலாகத் தெரியப்பட்டவராக இருக்கிறார். என்றாலுங்கூட எப்படி இந்த மேதை தோன்றியது, எப்படிச் செயல்பட்டது என்பதை - தமிழ் அன்பர்கள் பலர் எழுதியிருந்தாலும்கூட - பூரணமாகத் தெரிந்துகொண்டு செய்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது.

சினிமா நடிகர், நட்சத்திரப் பதவியை எட்டியவர் என்பதால் அவர் பெயர் விஸ்தாரமாகப் பரவலாகத் தெரிந்திருக்கிறது என்பது சரி. ஆனால் அவர் ஹாஸ்ய நடிகராக இருந்ததில் அவர் சொன்ன விஷயங்கள் சிரித்து மழுப்பிவிட வேண்டிய விஷயங்களாகவே கணிக்கப்பட்டு விட்டன. நகைச்சுவையை மீறி அவர் செய்ததில், சொன்னதில் ஒரு கனம், ஆழம் இருப்பது தெரியவரவில்லை.



எனக்கு இந்த மேதையின் அம்சங்கள் பூராவையும் ஆராய்ந்து விசாரித்து - தோற்றம், வளர்ச்சி, படிப்பு அல்லது படிப்பில்லாமை, சூழ்நிலைச் சார்பு அல்லது சார்பில்லாமை என்கிற விஷயங்களைப் பூரணமாக ஆராயவேண்டும் என்று ஆசை உண்டு. சந்தர்ப்ப கால வசதிகள் ஏற்படவில்லை. யாராவது செய்ய வேண்டியது மிக அவசியம். சினிமாச் சாதனைகள், சிரிப்புச் சாதனைகள் தெரிகின்றன சுலபமாகவே. அதற்கப்பால் சோகம், லட்சியம், நோக்கம் என்று பலவும் உள்ளன. அவற்றை அறிந்துகொள்வது மிகவும் உபயோகமாக இருக்கும்; தமிழ் சமுதாயத்துக்கு மிகவும் பயன் தரக் கூடியதாக இருக்கும். யாராவது செய்தால் நல்லது. செய்வார்கள் என்று தோன்றவில்லை.

எனக்கு உடனடியாகத் தட்டுப்படுகிற இரண்டொரு விஷயங்களைப் பற்றி மட்டும் இங்கு சொல்கிறேன்.

என். எஸ். கிருஷ்ணன் 'கிந்தனார்' என்று ஒரு கதாகாலட்சேபம்

ஆண்டு நிச்சயமாக நினைவில்லை. அப்போது நான் பம்பாயில் சர்தார் வல்லபாய் பட்டேலால் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'டெமாக்ரடிக் ரிஸர்ச் சென்டர்' (Democratic Research Centre) என்கிற ஸ்தாபனத்தின் கௌரவச் செயலாளராக இருந்தேன். ஐம்பதுகளின் முற்பாதியில் மாஸ்கோவுக்குப் போன ஒரு இந்திய நல்லெண்ண கோஷ்டியில் ஒருவர் ஏதோ மனஸ்தாபத்துடன் மற்றவர்களுடன் பிரயாணம் செய்தாலும் பேச மறுத்துவிட்டார் என்று ஒரு நாள் மாலை எங்கள் காரியாலயத்துக்கு ஒரு தந்தி வந்தது. அப்படிச் செய்தவர் பெயர் என். எஸ். கிருஷ்ணன் - தமிழ் நடிகர் என்று தகவல் வந்தது. பின்னர் விரிவாகச் செய்தி தெரிய வந்தது.

முதல் கூட்டத்தில், என்.எஸ். கிருஷ்ணன், தமிழில், 'இந்தியாவின் மகாத்மா காந்தி, ருஷ்யாவின் லெனின் போல மிகப் பெரிய தலைவர்' என்று சொன்னதை ருஷ்ய மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்க்க மறுத்திருக்கிறார். என். எஸ். கிருஷ்ணன் மேலே பேசவில்லை. மகாத்மா காந்தியைப் பற்றிப் பேச அனுமதியில்லை என்றால் தான் இந்திய தூதுகோஷ்டியில் செயல்பட விரும்பவில்லை என்று சொல்லி உடனேயே திரும்ப முடியாமல், மற்றவர்கள் முழுப்பயணத்தையும் முடித்துக் கொண்டதும் அவர்களுடன் திரும்பி வந்தார்.



இதில் மாஸ்கோ மொழிபெயர்ப்பாளர் செய்தது சரியா, லெனின் பெரியவரா, காந்தி பெரியவரா என்பதல்ல விஷயம். காந்தியைப் பெரியவராகக் கருதிய என். எஸ். கிருஷ்ணனை அதைச் சொல்லச் சுதந்திரம் இல்லாதவராகச் செய்து விட்டதைத் தான் தன்மானப் பிரச்னையாக கிருஷ்ணன் கருதியிருக்கிறார். இதில் விசேஷம் என்னவென்றால், நேருவுக்கு விஷயம் தெரிய வந்து கிருஷ்ணனைச் சமாதானம் செய்து, அது பற்றி அதிகமாகப் பேசவேண்டாம் என்று சொல்லிவிட்டதுடன், இந்தியப் பத்திரிகைகளிலும் இந்த விஷயம் வராமல் பார்த்துக்கொண்டு விட்டார்கள் அதிகார வர்க்கத்தினர். இதுபற்றி இரண்டொரு சிறு பத்திரிகைகளில் தவிர இந்தியாவில் எந்தப் பெரிய பத்திரிகைகளிலும் தகவல் வரவில்லை. தகவலை வெளியிட நான் செய்த முயற்சிகள் அவ்வளவாகப் பலிக்கவில்லை,

இன்னும் ஒரு விஷயம் சொல்லி இந்தக் கட்டுரையை முடிக்கலாம் என்று எண்ணுகிறேன். அவர் ஜெயிலிலிருந்து விட்டுத் திரும்பிய பிறகு; "உங்களுக்கு அங்கே மொட்டை போடவில்லையா?" என்று யாரோ கேட்டதாகவும், "நான் என்ன திருப்பதிக்கா போயிருந்தேன்?" என்று அவர் திருப்பிக் கேட்டதாகவும் சொல்லுகிறார்கள். இந்தப் பதிலில் இருந்த சுயமரியாதை உணர்ச்சி என்னை வெகுவாகக் கவர்ந்தது.

அவர் நடிப்பு, ஹாஸ்யம் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. ஆனால் ஒரு விஷயம் - தமிழில் ஹாஸ்யமாக எழுதுகிறேன் என்று அப்போது எழுதியவர்கள் எல்லோரும் ஜெரோம் கே ஜெரோம், ஸ்டீபன் லீகாக், டபிள்யூ. டபிள்யூ.

நடத்தினார். அதை சிதம்பரத்தை அடுத்த அண்ணாமலை நகரில் (சாஸ்திரிஹால் என்று நான் எண்ணுகிறேன். நிச்சயமாக நினைவில்லை) அரங்கேற்றியபோது கேட்க நேர்ந்தது முதல் இந்தக் கிந்தனார் தத்துவம், வேடிக்கையாகவும், நகைச்சுவையாகவும் சொல்லப்பட்டது போலத் தோன்றினாலும், எவ்வளவு முக்கியமான விஷயம் என்று எனக்குத் தோன்ற ஆரம்பித்தது.

'படிப்பில்லாதவன், சோடா வண்டிக்காரன்' என்று என். எஸ். கிருஷ்ணனை லக்ஷ்மிகாந்தன் (இந்து நேசன் புகழ்) கிண்டல் செய்து பல தடவைகள் எழுதியது அந்தத் தலைமுறையைச் சேர்ந்த பலருக்கும் நினைவிருக்கலாம். இந்தப் படிப்பில்லாமைக்கும், வேறு மேன்மையான தொழிலுக்குப் போக வசதியில்லாமைக்கும் என்ன காரணம் என்று யோசிக்கும்போதுதான் கிந்தனாரின் அவசியம் தெரிய வருகிறது. திண்ணைப் பள்ளிக்கூடத்திலிருந்து டவுன் பள்ளிக்கூடத்தில் படிக்கப் போக முடியாமல் சமுதாயத்தில் என்ன என்ன விஷயங்கள் தடுக்கின்றன என்பதைக் கிந்தனார் காலட்சேபத்தில் கேட்கலாம்.

இதை ஒரு மேதையின் குமுறல், தனக்குக் கிடைக்காதது பிறருக்காவது - வருகிற தலைமுறையினருக்காவது கிடைக்கட்டும் என்கிற நிலைப்பு இந்தக் கிந்தனார் சரித்திரத்தை இயக்குகிறது. இதில் உள்ள வார்த்தைகள், பாட்டுகள் ஓரளவுக்கு உடுமலை நாராயணகவி என்பவருக்குச் சொந்தம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் உருவம், அமைப்பு, சிந்தனை எல்லாம் என். எஸ். கிருஷ்ணன் என்கிற மேதையுடையவை. அதில் சந்தேகமில்லை.

தேசியக்கவி சுப்ரமணிய பாரதியார் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் சிலவற்றை ஒட்டிச் சில பாடல்களை எழுதியது தமிழர்களுக்குத் தெரியும். கோபாலகிருஷ்ண பாரதியார் விவரிக்கிற தாழ்ந்த குலத்தவ



கிந்தனார் காலட்சேபத்தில்

ளாக சொல்லப்படுகிற ஒரு நந்தனின் ஆன்மீக வேகம் தில்லை எல்லையில் ஓமக்குண்டத்தில் முடிந்து விடுகிறது. மோட்சம் என்பதற்கு சாவு என்றும் அர்த்தம் உண்டுதானே! - வேறு அர்த்தம் உண்டா என்பது நிச்சயமாகத் தெரியாத விஷயம். அதே போல கல்வி என்கிற விஷயமும் மேதையின் சாவாகவே போகலாம் தான்.

என். எஸ். கிருஷ்ணனுக்குக் கல்வி பெற சந்தர்ப்பங்கள் இருந்திருந்தால் அவர் இப்படி மேதையாக உருப்பெற்றிருப்பாரா என்பதே சந்தேகம்தான். ஆனால், கல்வி என்கிற லட்சியம் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று - ஆன்மீகம் என்பது ஒரு காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது போல.

கிந்தனார் என்கிற கதாகாலட்சேபம் நூலாக வெளிவந்ததா என்று எனக்குத் தெரியவில்லை. அது வந்திருந்தால் நந்தனார் சரித்திரத்தையும் விட அதிக சக்தி வாய்ந்த, கல்வி பற்றி ஒரு பிரச்சார நூலாக உருப்பெற்று செயல்புரிந்திருக்கக் கூடும். அதைக் காற்றோடு போகவிட்டது தமிழர்களின் தவறு என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. நமது கல்விமுறைகள் இன்னும் சீர்படவில்லை என்பதனாலேயே கூட 1986-ல் கிந்தனாருக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்படுகிறது. கிந்தனாரில், ''ஜன்னல் ஒன்றிருக்கும், அதைக் கரையான் தின்னயிருக்கும்.'' என்று ஒரு வரி வருகிறது. இன்று கல்வி என்கிற ஜன்னலைக் கரையான் மட்டும் தின்னவில்லை. மனிதர்களும் (அதிகாரிகளும், அரசியல்வாதிகளும்) தின்று கொண்டிருக்கிறார்கள்.

கிந்தனார் என்கிற 'காவியத்தை' அது 'Mock. Epic' என்றாலும், அமைத்த என்.எஸ். கிருஷ்ணனை ஒரு அசாதாரண மாமேதை என்றுதான் சொல்ல வேண்டும். காலத்தின் தேவையுடன் அவர் தனிக்குரலும் அதில் ஒலிக்கிறது.



ரங்கோன் ராதாவில்

என். எஸ். கிருஷ்ணன்

என்.எஸ். கிருஷ்ணனைப் பற்றி இன்னொரு விஷயமும் இங்கு சொல்லலாம் என்று தோன்றுகிறது. அவர் வாழ்ந்த காலம் பகுத்தறிவு இயக்கம், பெண் விடுதலை இயக்கம், நவீன கல்வி நோக்கிய இயக்கம், சுயமரியாதை இயக்கம் என்று பல இயக்கங்கள் ஏற்பட்டு உருவாகிச் செயல்பட்டுக்கொண்டிருந்த காலம். (அந்த இயக்கங்கள் முடிந்துவிட்டன என்று இன்றும் சொல்ல இயலாது) சுயமரியாதை, தன்மானம் என்று பலர் சொல்லிக்கொண்டிருந்தபோது, அதைச் செய்து காட்டியவர் என்று என்.எஸ். கிருஷ்ணனைச் சொல்ல வேண்டும். சொந்த விஷயங்களைப் பற்றி மட்டும் இல்லை இது. பொது விஷயங்களிலும் எப்படிச் செயல்பட்டது என்பதைச் சொல்லுமுன், பொதுவாகப் பலருக்கும் தெரியாத இந்த விஷயம் எனக்கு எப்படித் தெரிய வந்தது என்பதையும் சொல்லி விடுகிறேன்.

ஜாகப்ஸ் என்று பல ஆங்கிலேயர்களைக் காப்பியடித்துக் கொண்டிருந்தார்கள். என்.எஸ். கிருஷ்ணனின் ஹாஸ்யம் அப்படிப்பட்டதல்ல. தமிழ் மண்ணுக்கே சொந்தமான விஷயம் அது. மக்கள் இலக்கிய மரபிலிருந்து பல பழைய நகைச்சுவை சந்தர்ப்பங்களை எடுத்து அவர் கையாண்டிருக்கிறார்- இந்தக் காலத்திற்கு ஏற்றபடி. காபி அடிப்பது மிக மிக சுலபம். காபி அடித்ததைத் தமிழாக்குவதற்கு ஏதோ கொஞ்சம் திறமை இருந்துவிட்டால் போதும். மரபிலிருந்து எடுத்து அம்மரபுப் போக்கு இன்று உபயோகப்படும் படியாகக் கையாளுவதற்கு ஒரு மேதைதலைமை வேண்டும். அந்த மேதைதமை என்.எஸ். கிருஷ்ணனுக்குப் பூரணமாக இருந்தது.

கிந்தனார் காலட்சேபம் கேட்டபோது கிருஷ்ணனை ஒருதரம் நான் பார்த்திருக்கிறேன். அவர் நடித்த படங்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறேன். மற்றபடி அவரை நான் சந்தித்ததில்லை. சந்தித்திருக்கலாமே என்று இன்று தோன்றுகிறது! ●

---

இலக்கியத்தின் சனநாயகப்பாட்டினைத் தோற்றுவித்ததும், துரிதப்படுத்தியதும் அச்சுமுறைமையாகும். இலக்கிய சனநாயகத்தின் உருவ அமைதி வெளிப்பாடு உரைநடையாகும். பெரும்பான்மையான மக்களின் பெரும்படியான வாசிப்புக்கு உரைநடையே பொருத்தமானதாகும். கவிதை கூட அதன் சாயலில் வருவது தவிர்க்க முடியாததாயிற்று. உரைநடையின் சனநாயக நிலைப்பாட்டினை அதன் விளக்கத் தன்மையில் மாத்திரமல்லாது அதன் வாதிப்புப்பண்பிலும் (argumentative character) கண்டு கொள்ளல்வேண்டும்.

சனநாயகக்கோட்பாடானது அரசியல் நடைமுறையாக மாத்திரமேயுள்ளது. அரசியற் சனநாயகம் பூரண சமூக சனநாயகத்துக்கும் அதற்கு அத்தியாவசியமான பொருளாதார சனநாயகத்துக்கும் வழிவகுக்காது இன்னும் முதலாளித்துவக் கட்டமைப்பினுள்ளேயே இருப்பதால், இந்த அரசியற் சனநாயகச் செல்நெறியும் மலினப்படுத்தப் படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. சனநாயகம் என்ற உயரிய மக்கள் நலக் கோட்பாட்டை வெகுசனப் பண்பாட்டினை (mass culture) நியாயப்படுத்தும் கொள்கையாக மாற்றி, இலாபநோக்குக்காக இலக்கியத்தையும், பிறகலைகளையும் மலினப்படுத்தும் நடைமுறை தமிழிலக்கியத்தையும் தாக்கியுள்ளது.

**டாக்டர் கா.சிவத்தம்பி**

····இனவாதம் பரந்துபட்ட தொழிலாள வர்க்கத்திற்கோ இடதுசாரி கோட்பாட்டின் நலனுக்கோ உகந்த நல்ல, என முடிவாக அழுத்தமாக கூறவேண்டும். இலங்கைத் தொழிலாளர்கள் 1890—1930 ஆகிய நாற்பது ஆண்டுகளில் அவர்களது இயக்கங்கள் ஒன்றுபட்ட வர்க்கப் போராட்ட கொள்கையையே கொண்டிருந்தன; மறுமலர்ச்சியாளர்கள் சிறுபான்மையினத்திற்கு எதிராக பகைமையை வளர்க்க முற்பட்டபோது தொழிலாளர் ஐக்கியம் குறைக்கப்படவில்லை. 1920களில் இருந்த தொழிலாள வர்க்க தலைவர்கள் 1930களில் வகுப்புவாதிகளாய் மாறியபோதும் அடுத்த தசாப்தங்களில் தொழிலாளர் இனவேறுபாடுகளை மறந்து இடதுசாரிகளின் தலைமையில் பல்வேறு தீவிர போராட்டங்கள் மூலம் தமது வர்க்க உணர்வை வெளிப்படுத்தினர். இன்றும் தொழிலாள வர்க்கத்தின் முற்போக்கான பகுதியினரும் விவேகம் மிக்க பகுத்தறிவாளரும் இனப்பகையால் வீழ்ச்சியடையும் நாட்டை மேலே உயர்த்தி முன்னேற்றுவதில் உதவ முடியும். தற்போது பகுத்தறிவு தாழ்நிலையில் உள்ளது. ஆரிய இனத்தவர் என்ற ஐதீகமும், விஜயன் வம்சத்தவர் என்ற பொய்மையும், துட்டகைமுனு போல இன வீரபுருஷர்களை உருவாக்குகிறோம் என்ற கூற்று ஆகியவை இன்று புத்துயிர் பெற்றுள்ளன: இவை மீண்டும் இனவெறியைத் தூண்டும் பலமிக்க குறியீடுகளாக உள்ளன.

பத்திரிகைகள் எல்லாம் இனவாதமும் பகட்டான தேசியக் கொள்கையும் கொண்டவையாக உள்ளன. அதே வேளை சோதிடப் பலாபலன் கூறுவதோடு பேய்பிசாசு கதைகளையும் வெளியிடுகின்றன. குழப்பமேற்பட்ட இக்கால கட்டத்தில் அமைதியின்மையையும் உறுதியின்மையையுப் பிரதிபலிப்பதாக தெய்வாம்சம் பொருந்திய மனிதர்களுப் பொய்மையான ஆயர்களும் பௌத்தசாமிமாரும் ஆசிரியர்களும் பழமையை போற்றுபவர்களும் சுறுசுறுப்பாக செயலில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே போராட்டம் நீண்டதாகவும் கடுமையானதாகவும் இருக்கும்: ஆயினும் நீதி விரைவாகவோ அல்லது சிறிது காலம் தாழ்த்தியோ நிலைபெறும் என நம்புகிறேன்.

**குமாரி ஜெயவர்த்தன**



வேதனை

ஓவியங்கள்  நன்றி "அலை"



கோ. கைலாசநாதன்

# விடியலை நோக்கி.

சுஜீ ஜெகராஜா

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத
தமிழென்று சங்கே முழங்கு - பாரதிதாசன்.

ஏன் இங்கு தமிழன் இன்னும் தூங்குகிறான் ?
தமிழ் மண்ணைப் பிரிந்ததினால் தாய் நினைவும் மறந்தானோ

அடடா மறந்து விட்டேன். அன்னைத் தமிழுக்கு
இன்னல்கள் பல கோடி
இன்னும் ஏன் தூங்குகிறாய் ?
துடித்தெழுந்து வந்திடடா

உன்னைத் தாலாட்டி உருவாக்கி வைத்த மகள்
கைவிலங்கிட்டு கடுஞ்சிறையில் வாடுகிறாள்
ஏன் என்று தேடாமல் எத்தனை நாள் தூங்கிடுவாய்

தூங்குவது போன்று நடிக்கின்ற கூட்டமொன்று
அங்காங்கே கடல் கடந்து காசுகளைத் தேடிடுது
தூங்காமல் இரவுகளில் நோட்டுக்களைச் சேர்த்திடுது

ஏங்குகின்ற எம்மினத்தின் தாய்க்குலமும் - தங்கைகளும்

உங்கள் சுகம் கேட்டு உருக்கமுடன் எழுதுகிறார்
கண் உறக்கமின்றி ஊசலாடும் உயிர்களுடன்
உலகத் தமிழ் உறவு தேடி உரிமையுடன் அழைக்கின்றார்

உன் பங்கைச் செலுத்தாமல் இன்னும் நீ தூங்குகிறாய்
எழுந்திடுவாய் இப்போதே இக்கணமே
ஈரமுள்ள தமிழ் மகனே
இரும்பல்ல உன் உதயம்

வரம்பு மீறிப் போகின்ற வட நாட்டார் கையொடித்து
உரம்மிகுந்த தமிழர் படை உன் மண்ணைக் காக்கிறது

கரும்பே தேனே கற்கண்டே என்னுன்னைக் கட்டி மகிழ்ந்த
மண்மகளின் முகத்தினிலே முழுநிலவைக் காணவில்லை

முழுநிலவை மறைப்பதெல்லாம் மூன்று வித மூக்கர்கள்
தெற்கும் வடக்கும் – நெருப்பொறுக்கி எட்டப்பரும்
சேர்ந்து செய்யும் கொடுமைகளைக் கொழுத்திடுவோம்
விரைந்து வா

இதுவரை நீ சேர்த்து வைத்த சொத்துக்கள்
எம்மனத்தின் விடியலுக்கு ஏற்றி வைத்த தீபங்கள்

இதற்கிடையும் ஒருசாரார் தனைமறந்து வாழ்கின்றார்
எதற்கிவர்கள் ஜோரம் போய்ச் சுகம் காண விழைகின்றார்.

எரிகின்ற நெருப்பினிலே உடன் விழுந்த பிறப்புகள்
திரிந்து விட்ட பால் போன்று வாழ்கின்ற– புதிய வார்ப்புகள்
மறந்திடுவோம் இந்த ஈனப்பிறவிகளை
ஈழத்தில் இவர்க்கு இனி இல்லை உறவுகள்

காலத்தின் கோலம் உனைக் கடல்கடக்க வைத்தது
மேலைக் கடலில் மூழ்கி விட்ட கதிரவனும்
நாளைக்கு வருவதும் கீழைத் திசையில் தான்
வேளை வந்திருக்கு வீடு திரும்புவதற்கு
கோழையல்ல தமிழன் மூலையில் முடங்குவதற்கு
சேலை கட்டும் பெண்புலியும் இன்று சிரஞ்சீவிக்குவிக்கிறாள்

பாலையல்ல எம்வாழ்வு பாழ்பட்டுப் போவதற்கு
காலையிலே காண்பது தான் கதிரவனின் பட்டொளி
சுட்டெரிக்கும் சூரியனின் சுடர்கண்டு எழுந்திடுவாய்
கண்மணியாம் தமிழ் மண்ணில் காளான்கள் வரலாமோ?
இன்னும் ஏன் தூங்குகிறாய்? விழித்தெழு தமிழா
அன்னை கை விலங்கை ஒடித்து வருவதற்கு
ஆர்ப்பரித்து எழுந்திடுவாய்

விடியலை நோக்கி விரைந்து சென்றிடுவோம்.

* — * — * — * — * — * — * — *



"நாட்டுக்காக ரத்தம் சிந்தத் தயார்னு சொன்னீங்களாமே?"



"ஆமாம். நீங்க வேணா ரத்தத்தை கொண்டு வந்து கொடுங்க.. கீழே சிந்தி காண்பிக்கிறேன்."

—சுவாதி




"அரசியல்வாதிங்க, மேடையில பேசும்போது 'புதிய இந்தியாவைப் படைப்போம், புதிய இந்தியாவைப் படைப்போம்'னு சொல்றாங்களே... பயமா இருக்கு....!"

"ஏன்?"

"இப்ப இருக்கிற இந்தியாவை வித்துட்டுப் போறாங்களோன்னுதான்...!"

La situation politique au Sri-Lanka.

Le 9 Juillet dernier, au Centre Sheraton du boulevaro René-Lévesque, avait lieu un symposium organisé par l'Association Mondiale Tamoule du Canada. Ce symposium regroupa des pannellistes intéressants et compétents, tels, le Dr. A. Jyaratnam Wilson, professeur de sciences politiques à l'Université du Nouveau-Brunswick, Mme Karen Parker qui représente les Tamouls srilankais aux Nations-Unies à Genève, M. Paul Wakely, avocat du New Jersey, le révérend R.G. MacNeil, Sri-Kugan Sri-Skantha-Raja, conseiller légal de Toronto, le révérend Philip N. Ratnapala, et des représentantes de Amnistie Internationale, et de l'Office de l'Immigration du Québec. La séance, divisée en deux sessions, fut présidée premièrement par M. K. Subramaniya, président de l'Association Mondiale Tamoule, à Montréal, et Mme, Joyce Yedid, avocate de Montréal.

Ces différents intervenants, entretenèrent l'assistance d'une part au sujet de la politique intérieure du Sri-Lanka, de l'accord Indo-Srilankais et de ses conséquences, et d'autre part de la situation du peuple tamoul au Sri-Lanka, et des réfugiés.

Les Tamouls représentent le 3ième groupe en importance qui demande le statut de réfugié à l'Office d'Immigration du Québec. En effet depuis 1983, 106,000 Tamouls devenus réfugiés, ont demandé l'asile à différents pays du monde, et depuis 1983, environ 6,279 se sont adressé au Canada, et il y a entre 3,000 et 4,000 Tamouls vivant au Québec actuellement.

Ce qui pousse ces gens à quitter leur pays c'est l'horreur d'une guerre, qui, pour des raisons politiques n'est pas reconnue mondialement, ce qui prive les Tamouls, de leur statut de réfugié, dans bien des pays.

Le peuple tamoul occupe majoritairement 2 des 9 provinces du Sri-Lanka, celle du nord (Northern Province), et celle de l'est (Eastern Province). Dans les 7 autres provinces, vivent les Cinghalais en majorité. Ces deux peuples vivaient plutôt en paix, avant que les colons anglais décident, au 18ième siècle d'unir les deux territoires, pour faciliter leur administration de l'île. Les deux peuples qui possèdent des langues et des cultures différentes, se virent ainsi réunis sous le contrôle de la couronne britannique, dans un processus d'assimilation à la culture anglaise.

En 1948 le Sri-Lanka obtient son indépendance, mais les deux peuples majoritaires aspirant à leur autodétermination se voient réunis dans le même pays, et les Cinghalais majoritaires tentent depuis ce temps, d'imposer leurs langue, et leurs lois aux Tamouls. Ces derniers voudraient que leur territoire, leur langue, leur nationnalité, et leur droit à l'auto-détermination soient reconnus. Ils désireraient unir les deux provinces qu'ils habitent en majorité, et en faire un pays autonome, le Tamil Eelam.

Les jeunes Tamouls révoltés par les mesures discriminatoires existant dans le système éducationnel, et dans l'emploi, se sont regroupés dans le LTTE, (Liberation Tigers of Tamil Eelam). Ce mouvement armé, donne beaucoup de fil à retordre à l'autorité cinghalaise. Et, sous prétexte de maîtriser la révolte, l'armée

Srilankaise a massacré plusieurs innocents, surtout depuis 1983 (première vague de réfugiés tamouls).


Mais depuis Juillet 1987, la situation s'est envenimée, à cause de l'implication du gouvernement indien, dans le conflit. En effet, le 29 Juillet 1987, M. Rajiv Gandhi, premier ministre de l'Inde et M. J.R. Jayawardene, président du Sri-Lanka, signèrent un accord ayant pour but de rétablir la paix au Sri-Lanka. Les conséquences de cet accord pour les Tamouls: environ 5,647 Tamouls ont été tués par l'armée indienne car environ 100,000 soldats indiens ont été envoyés, pour aider le gouvernement srilankais à rétablir l'ordre. Environ 50,000 maisons et commerces ont été détruits, particulièrement à Jaffna, et les civils tamouls, tous considérés comme des complices du LTTE qui comprend environ et seulement 2,000 soldats, non protégés par la loi de l'amnistie, ces civils, donc, sont tués sans discernement hommes, femmes et enfants. Au symposium, il y eut visionnement d'un film présentant les horreurs de la guerre et plus particulièrement des images prises lors des attaques indiennes dans la région de Jaffna, avec des enfants mutilés, tués, le cadavre d'un Tamoul se faisant dévorer par une bête etc... Aussi des disaines de femmes tamoules furent violées et enlevées, et les soldats indiens s'adonnèrent même au pillage dans la ville de Jaffna.

Comment l'Inde pays prônant la démocratie, peut agir de la sorte? D'après les intervenants du symposium, c'est que l'Inde expansionniste veut assurer sa sécurité, en ayant un pied à terre au Sri Lanka, qui avec sa position stratégique dans l'Océan

Indien, suscite la convoitise. La Baie de Trincomalee, en particuler, lagune naturelle, est déjà occupée par les Américains, et M. Gandhi aimerait bien les voir, lui céder la place. Dans ce jeu politique, les Tamouls servent de monnaie d'échange, entre les gouvernements srilankais et indiens. Pour conserver sa suprématie dans l'Asie du Sud-est, l'Inde est prête à tuer des innocents, violant les Droits de l'Homme, et ainsi amadouer M. Jayawardene. Ces actes de violence envers les Tamouls se continuent même aujourd'hui et ceux qui ont décidé de ne pas s'expatrier, vivent continuellement dans l'inquiétude, et dans la peur.

Les intervenants au symposium semblaient perplexes quant au rétablissement de la paix, et leur message est un appel à la solidarité des Tamouls du monde entier, des pays d'acceuil et de tous ceux qui croient à la démocratie.

Edith Delisle EDITH DELISLE



# உருவகம்

பூரவ்ணபயான்

ஓர் அழகிய மங்கை வந்து கொண்டிருந்த கார் நடுவழியில் நிற்று விட்டது. அதைக் கண்ட ஒரு வயோதிபர் அவ்வழியில் சென்று கொண்டிருந்த சில இளைஞர்களை அழைத்தார். " இம் மங்கை நம்மைச் சார்ந்தவள். உலகின் நீண்ட சரித்திரமும், கலாச்சாரமும் கொண்டோரின் சந்ததியினள். இன்று இக்கதியுற்றுள்ளாள். இவள் சேரவேண்டிய இடத்திற்கு இவளை பாதுகாப்பாக கொண்டு செல்லுவது நம் கடமை. எனக்கோ வயதாகிவிட்டது. இளைய சமுதாயத்தின ராகிய நீங்கள் தான் இப்பொறுப்பை ஏற்க வேண்டும் என்று கூறி விட்டு மறைந்து விட்டார்.

இளைஞர்கள் உற்சாகத்துடன் கைகொடுத்து காரைத்தள்ளினுர்கள். எதிர்க் காற்று பலமாக வீசிய போதும் கார் நகரத்தொடங்கியது. கார் சிறிது தூரம் சென்றவுடன் அவ்விளைஞர்களுக்கு எண்ணம் வந்தது. " இவளோ அழகிய மங்கை இவள் சேரவேண்டிய இடமோ சிறப்பானது எல்லோருடனும் சேர்ந்து தள்ளினுல் நம் மதிப்பு எப்படித் தெரியவரும். நாமே தனியாக இவ்வேலைச் செய்தாலென்ன?

இச் சிந்தனை வந்ததும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்கில் தள்ளத் தொடங்கினுர்கள். ஒருவர் விசைக்கு எதிராக மற்றையவர் தள்ளத் தொடங்கினதால் கார் அங்குலம் அங்குலமாக ஒரு திசையில் நகரத் தொடங்கியது.

சில இளைஞர்களுக்கு கோபம் வந்தது. ஏனையோருக்கு ரோசம் வந்தது. காரைவிட்டு விட்டு ஒருவரோடொருவர் மல்லுக்

கட்டத் தொடங்கினர். பலம் வாய்ந்த சிலரால் மற்றையோர் விரட்டப் பட்டனர். எஞ்சியிருந்தோர் காரைத் தள்ளினர். கார் நகர மறுத்தது. மிகுந்த சிரமப்பட்டு தள்ளினார்கள். கார் சில சென்றி மீற்றர்களே நகர்ந்தது.

இவற்றையெல்லாம் பக்கத்து வீட்டுக்காரன் பார்த்துக் கொண்டு இருந்தான். இவ்வளவு நேரமும் தூரத்திலிருந்து குரல் கொடுத்து இளைஞர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்த அவன் அவ் அழகிய மங்கையைப் பார்த்தான். காரையும் பார்த்தான் இளைஞரையும் பார்த்தான். பின்னர் மங்கையின் வீட்டையும் பார்த்தான். தன்னிடமிருந்த பலம் வாய்ந்த டிரக் வண்டியைக் கொண்டு வந்து காரைப் பிணைத்தான். இளைஞரும் மகிழ்ச்சியுடன் அவனுக்கு உதவினர். அவன் டிரக் வண்டியை செலுத்தி காரை இழுக்கத் தொடங்கினான். டிரக் வண்டியிலோ அல்லது காரிலோ ஓர் இடத்தை எதிர் பார்த்த இளைஞர்கள் ஏமாற்றம் அடைந்தனர். காரை இழுத்துப் பிடிக்க முயன்றனர். டிரக் வண்டியும் பலத்துடன் இழுத்தது. கார் பாதையை விட்டு விலகி வேறு திசையில் இழுபடத் தொடங்கியது. இளைஞரும் இழுபட்டு அரைபட்டுக் கொண்டு சென்றனர். அயல்வீட்டுக் காரனின் டிரக்கில் பெற்ரோலும் குறைந்து கொண்டு வந்தது. காரின் குலுக்கலினால் மங்கையும் காயமுற்றாள்.

* * * * * *

''இரட்டைக் குழந்தை பிறந்திருக்கு என்பதை இங்கிலீஷ்லே எப்படித் தந்தி குடுக்கிறதுன்னு தெரியலே...''

''அப்படின்னு தந்தியே குடுக்கலியா?''

''குழந்தை பிறந்திருக்குன்னு தனித் தனியா ரெண்டு தந்திகள் குடுத்தேன்!''

—பெ. கலாசாமி



## ஆண்ட பரம்பரைக்கு

இளவாலை விஜயேந்திரன்

எமதூரின்
மன்னவரை எங்கேனும் கண்டீரோ?

வான முகட்டில்
வழி தெரியாச் சேனைப் புலத்தில்
காடுகளில்
ஊர்ப் புறத்துத் திண்ணைகளில்
அலருலவும் அந்தப் புரங்களில் —

பாவம்,
ஊர் முழுக்கக் குலுங்கியதில்
ஒப்பாரி வைத்தழுது
பிறகும், வீசுகிற எலும்புக்காய்
விழுந்தெழுந்து ஓடி அலுப்புற்றும்
சாகாமல் உயிர் வாழ்ந்தார்.

கோடிப் புறமிருக்கும்
குதிரை லாயங்களில்
இரவுகளில் வந்து தங்குவாரோ?
பிடியும்,
சேலையும் இட்டுவையும்.

தொலைநீளக் கடற்பரப்பில்
நீந்தித் தொலைத்தாரோ?
மறுகரையில்,
இன்னும் ஒருதடவை
அழுது தொலைத்தாரோ?

பொழுதின் இருட்டோடு
இராவணனின் புஷ்பகத்தில்
போய்ச் சேர்ந்து விட்டாரோ?
சிம்மாசனம் அமர்ந்த
மாபெரிய மன்னவனின் படையெடுப்பை
விழிபிதுக்க நாதியற்றுப் போனாரோ?
பாவம்தான்.

அக்கரையின் அரண்மனையில்
வீசும் சாமரையில் உடல் குளிர்ந்து
வேர்வையற்று,
உண்டு களித்து வாழ்கிறாரோ?
ஓய்வுக்கு,
வில்லெடுத்து வெளிக்கிளம்பிக்
காடுகளைத் திரை றடித்து
(அவர் வீரம் தெரியாதா?)
வேகவைத்த பறவைகளை ருசிக்கிறாரோ?

மன்னவரின் தேரோடிய
வீதிகளில் கோடையிலோ
பாளம் வெடிக்கிறது.
வெடிப்புகளில் எங்களது
பச்சை ரத்தம் உறைகிறது.

கடல் குடைந்து மீன்தேடும்
மனிதர்களே!
அக்கரையில் அவருடைய தலைதெரிந்தால்
உரத்துச் சொல்லுங்கள்,
''உங்கள் கிரீடம் எங்களிடம் இருக்கிறது.
இன்று கொழுத்தும், நெறித்தும்
உம்முடைய மண்டை பெருத்திருக்கும்
வரவேண்டாம்.
அளவுள்ளவன் சூடிக்கொள்ளட்டும்.''

* * * * *

# சுஜாதா

சுஜாதா என்கிற S.ரங்கராஜன்.
சிறிரங்கத்தில் பிறந்தார். 20ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வரும் இவருக்கு 57லட்சம் வாசகர்கள் இருப்பதாக ஒரு முறை INDIAN EXPRESS எழுதியது.

ஒரு முதல் தர நடிகருக்கு கூடும் கூட்டம் இவருக்கு கூடுகிறது. இது வரை 70 க்கு மேற்பட்ட புத்தகங்கள் வெளிவந்திருக்கு. நவீன விஞ்ஞானம் தெரிந்த ஒரே தமிழ் எழுத்தாளர்.

இன்று எல்லா தமிழ் வர்த்தகப்பத்திரிகைகளிலும் இவரது படைப்புக்கள் வெளிவருகின்றது. இவர் எழுதத்தொடங்கிய ஆரம்பகாலத்தில் தமிழில் வெளிவரும் நல்ல சஞ்சிகைகள் இவரை அறிமுகப் படுத்தின.

ஒரு நல்ல சிறுகதை எழுத்தாளர் என எல்லாத்தரப்பினராலும் பாராட்டப்படுகின்றார். ஆரம்பகாலத்தில் இவர் எழுதிய சிறுகதை ஒன்றை பார்வை வாசகர்களுக்காக மறுபிரசுரம் செய்கிறோம்.

–ஆசிரியர்

# குமாரசுவாமி ஒரு சோஷலிஸ்ட்

டாக்ஸி ஓட்டிக் கொண்டிருந்த குமாரசுவாமி தற்போது திரு. ஆதிமூலத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமான காரியதரிசி ஆனதை சில வரிகளில் சொல்லி விடலாம். அவன் டாக்ஸியில் ஒரு தடவை பிரயாணம் செய்த போது ஆதிமூலம் தன் பர்ஸை மறந்து விட்டுச் சென்று விட்டார். அதை அவர் வீடு தேடித் திரும்பி வந்து கொடுத்து விட்டுப் பணிவுடன் ''எல்லாம் சரியாக இருக்கிறதா எண்ணிப் பாருங்கள் சார்'' என்று சொன்னான். ஆதிமூலம் ஆச்சரியப்பட்டு ''இவ்வளவு நம்பிக்கையான ஆசாமியாக இருக்கிறாயே. ஏன் அன்றாடம் காய்ச்சியாக டாக்ஸி ஓட்டுகிறாய்? என்னிடம் வந்து எனக்கு டிரைவர் வேலை பார். மாதம் 100 ரூபாய் தருகிறேன்'' என்றார். ஒப்புக் கொண்டான்.

டிரைவராக ஆரம்பித்தான். வீட்டுச் சாமான்கள் வாங்குவதையும் கவனித்துக் கொண்டான். பின்பு ஆதிமூலத்தின் சில்லறைக் கணக்குகளையும் கவனிக்க ஆரம்பித்தான். ஒரு பைசா தொடாமல் நெருப்பாக இருந்தான். ஆதிமூலத்துக்கு அவன் பேரில் நம்பிக்கை ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை வலுத்தது.

ஆதிமூலத்தின் தொழில் கொஞ்சம் நிழலானது. வாங்கல், விற்றல். எதையும் வாங்குவார், வாங்கின சூட்டில் விற்று விடுவார். இந்த சாமர்த்தியம் சங்க காலத்திலிருந்து பரம்பரையாக அவர் குடும்பத்தில் வந்தது. ரத்தத்தில் ஊறின சாமர்த்தியம் வாய்ச் சவுடால்.

அவர் முக்கியமாக வாங்கி விற்பவை இவை :—

டிரான்ஸிஸ்டர்கள், கார், ரெப்ரெஜிரேட்டர் முதலியவை. கௌரவமான பித்தலாட்டம். வருமானவரி ஆட்களைச் சமாளிக்க, சாமர்த்தியமான கணக்கு. மொத்த வியாபாரமும் டெலிபோன் பேச்சில் தயாராகத் தண்ணீராக ஓடும் பணம். எதையும் கேள்வி கேட்காமல் வாங்குவார். ஒரு தடவை ஒடிந்து போன ஒரு சர்க்கஸ் கம்பெனிக்காரர்கள் இவரிடம் இரண்டு யானைகளை விற்கப் பார்த்தார்கள். ஆதிமூலம் திருவல்லிக்கேணி கோயிலில் விசாரித்து அவர்களுக்கு யானை தேவையில்லை என்று கண்டு கொண்டு அந்த மிருகங்களை வாங்க மறுத்து விட்டார், இந்த ஒரு தடவைதான் மறுத்திருப்பார். சாதாரணமாக

வர்ஜ்யா வர்ஜ்யம் இல்லாமல் வாங்குவார். சமீபத்தில் டாக்டர் நரசிம்மாச்சாரி என்பவர் தன்னுடைய எம். எஸ். எஃப். ஆர். ஸி. எஸ். (லண்டன்) எஃப். ஆர். ஸி. எஸ். (எடின்பரோ) டிகிரிகளுடன் காலமானார். பெரிய நரம்பு வைத்திய நிபுணர். அவர் வைத்திருந்த, 'எலக்ட்ரோ என்சிபாலோகிராம், (மன்னிக்கவும்) என்கிற கருவியை ஆதிமூலம் தான் வாங்கினார். எலக்ட்ரோ என்சிபாலோ கிராமுக்கும் ஒரு குடைக்கும் வித்யாசம் தெரியாது! இருந்தும் வாங்கின உடன் அதைத் தூசி கூடத் தட்டாமல் வடக்கே ஒரு ஆஸ்பத்திரிக்கு விற்று விட்டார். ரூ. 8000 லாபம். அவர் வியாபார வெற்றிக்குக் காரணம் (1) உடனே பணம் (2) அநாவசியக் கேள்விகள் கேட்பது கிடையாது (3) எழுத்து விவகாரம் கிடையாது!

குமாரசுவாமி (அவர் டிரைவர், காரியதரிசி இத்யாதி) ஒரு சோஷலிஸ்ட். செய்தித் தாள்களின் பாஷையில் ஒரு ஆதார இடதுசாரி சோஷலிஸ்டு. அவன் மனதில் தன் நிலைமைக்கும் அவருக்கும் உள்ள வித்யாசம் வெறுப்பைத் தான் ஏற்படுத்தியது. தான் தினமும் பத்து மணி நேரம் உழைத்து மாதம் நூறு ரூபாய் கிடைக்கிறது. ஆதிமூலம் பேச்சு வாக்கில் பத்தாயிரம் இருபதினாயிரம் என்று புரட்டுகிறார். இந்த நிலை ஏன்? என்கிற கேள்விக்கு பதிலாக அவனுக்கு இரண்டு வழிகள் தான் புலப்பட்டன. எங்கள் இருவருக்கும் உள்ள நிலை வித்தியாசம் மறைய வேண்டுமானால் ஒன்று ஆதிமூலத்தின் மகளை நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும், அலலது அவர் பணத்தில் பெரும் பகுதியை சமயம் பார்த்து அபேஸ் செய்ய வேண்டும். (இதனால் சோஷலிஸ்டுகள் எல்லோருமே திருடர்கள் என்று நான் சொல்லவில்லை. குமாரசுவாமி அப்படி, அவ்வளவுதான்.)

முதல் முயற்சியில் தீவிரமாக இறங்கினான். ஆதிமூலத்தின் பெண் பெயர் பார்வதி. அழகான அசடான பெண். வயது 18 ப்ளஸ். சட்டை சுற்றளவு 36. 'ஐ. க்யூ.' 36. அவளை தினமும் காலேஜிற்கு காரில் கொண்டு விட்டு வருவது வழக்கம்.

ஒரு அக்டோபர் மாதத்தின் இளம் காலையில் குமாரசுவாமி தன் சோஷலிஸக் காதல் முயற்சியை ஆரம்பித்தான். காரின் கண்ணாடி வழியாகப் பார்வதியைப் பார்த்துச் சிரித்தான். பார்வதி பதிலுக்குச் சிரித்தாள். குமாரசுவாமிக்கு உற்சாகம் பிறந்து விட்டது. மறுநாள் ரூ. 1. 25 கொடுத்துத் தலை வெட்டிக் கொண்டு (மிஷின்

போடாமல்) டிஞேபால் போட்டு வெள்ளை சட்டை அணிந்து கொண்டு அவளைக் காரில் பார்த்துச் சிரித்தான். அவள் பதிலுக்குச் சிரித்தாள். ஆஹா! அந்தஸ்து, பணம் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கும் ஒரே மந்திரம் காதல் என்று எண்ணி மறுதினம் அவளுடன் பேச்சுக் கொடுக்க எண்ணி உற்சாகத்துடன்......

'சித்தூர் ராணி பத்மினி' என்கிற திரைப்படம் போல் அவன் உற்சாகம் வந்த வேகத்தில் போய்விட்டது. ஏன்? அந்தப் பெண் பார்வதி தோட்டக்கார ஏழுமலை (வயது 57) யைப் பார்த்துக்கூட அப்படித்தான் சிரித்தாள். அப்புறம் அவர்கள் வீட்டுக்கன்று குட்டி லஷ்மி (வயது 1½) யைப் பார்த்துக்கூட அப்படித்தான் சிரித்தாள். சுலபத்தில் முத்துப்போன்ற பல்லைக் காட்டும் அந்தப் பெண் அன்று மாலை கடற்கரையில் சகவயது வாலிபன் ஒருவனுடன் உல்லாசமாக நடந்து கொண்டு சென்றதைப் பார்த்ததும் அவன் காதல் முயற்சி ஊதிஅணைக்கப்பட்டு விட்டது. இது நமக்கு உதவாது என்று கைவிட்டு, இரண்டாவது முயற்சியில் தீவிரமாக மனதைச் செலுத்தினுன். அதுதான் பெரிய திருட்டு.

என்னதான் ஆதிமூலத்துக்கு அவன் பேரில் நம்பிக்கை இருந்தாலும் அவர் அவனிடம் இதுவரை இரு நூறு முன்னூறுக்கு மேல் பணம் ஒப்படைத்ததில்லை. ஆனுல் நம்பிக்கை நாளாக நாளாக ஏறிக் கொண்டு வந்தது. குமாரசுவாமி நிறையத் தொகை பிடிபடும் நாளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். ஒரு தடவை அவனிடம் அவர் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து பாங்கில் கட்டச்சொன்னுர். அப்பொழுது ஆசை தட்டியது. கடைசி நிமிஷத்தில் மனம் மாறியது. இந்த ஆயிரத்தைக் கட்டி விட்டால் இன்னும் நம்பிக்கை அதிகமாகும். நிஜமாகப் பெரியதொகை புரளும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று காத்திருந்தான். காத்திருந்தான், காத்திருந்தான் காலண்டர் தாள்கள் தான் கிழிந்தன. அந்த சந்தர்ப்பம் வரவில்லை. அவன் பொறுமை ஆதிமூலம் நிறைய சோதித்தார். அந்த ஆயிரத்துடனேயே ஓடியிருக்கலாம் என்று வருத்தப்பட்டுக் கொண்டான்.

ஆனுல் அந்த சந்தர்ப்பம் வராமல் இல்லை. காத்திருந்த தினம் ஒரு வியாழக்கிழமை வந்தது. நேரம் காலை பத்து மணி. டெலிபோனை வைத்துவிட்டு ஆதிமூலம் அவனைக் கூப்பிட்டார்.

''சர்க்கரை செட்டியார் வீடு தெரியுமா?'' என்றார்.

''தெரியும் சார்.''

''அவரிடம் இந்தக் கவரைக் கொடுத்து விட்டு...'' நீளமான தடியனான கவர் மேஜையின் மேல் இருந்தது. ''... அவரிடம் ஒரு அம்பாசிடர் கார் இருக்கும், அதை ஓட்டிக் கொண்டு வந்துவிடு.''

''கடைசியிலே காரை விற்கச் சம்மதித்து விட்டாரா, சார்!''

''ஆமாம்; பதினாயிரத்து சொச்சத்துக்கு தீர்ந்து போச்சு...900 மைல் தான் ஓடியிருக்கிறதாம். வரும்போது நம்ம சம்பந்தம் 'கராஜில்' கொண்டு காட்டி இன்ஜினைப் பார்த்து எத்தனை மைல் ஓடியிருக்கும் என்று பார்த்துக்கச் சொல்லு, என்ன?... இந்தா, பணம் ஜாக்கிரதை...''

குமாரசுவாமிக்கு அந்த உறையை வாங்கும் பொழுது முதுகுப் பக்கம் ஒரு ஐஸ் நதி ஓடியது. இதுதான்...இந்த சமயம் தான், இந்த சமயம் தான்... என்று எண்ணிக் கொண்டான்.

''சரிங்க, நம்ம காரை எடுத்துக் கொண்டு போகவா?''

''முட்டாள், வரும்போது இரண்டு காரையும் ஓட்டி வருவாயா?''

''ஓ! மறந்து விட்டேங்க!'' என்று சிரித்தான்.

''குமாரசுவாமி, ஜாக்கிரதை, பதற்றமே காண்பிக் காதே... டாக்ஸியிலே போ, பணம் பத்திரம்.''

''கவலைப்படாதீங்க சார், பத்திரமாகச் சேர்ப்பிக் கிறேன்'' என்றான்.

வீட்டுக் காம்பௌண்டை விட்டு வெளியே வந்ததும் அவனுக்கு வியர்வையில் சட்டை உடலுடன் ஒட்டிக் கொண்டது. 10 ஆயிரம் ரூபாய். இந்தத் தருணத்தை விட்டால் இனி எங்கே கிடைக்கப் போகிறது. இப்போது மணி என்ன? பத்தேகால்! எங்கே போகலாம்? முதலில் சென்னையை விட்டு வெளியே போக வேண்டும். எங்கே?

எங்கே என்று தீர்மானிக்கவில்லை. பையில் உறை கனத்தது. எதிரில் வந்த டாக்ஸியை துரத்தி நிறுத்தி தானே அதன் கொடியை மடக்கி விட்டு ஏறிக் கொண்டான். நல்ல வேளை. டாக்ஸி டிரைவர் தெரிந்தவனில்லை.

''எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போப்பா.''

எழும்பூர் ரயில் நிலையத்தில் உயரமான போர்டில் வண்டிகள் புறப்படும் நேரத்தை அவசர அவசரமாக

அவன் படித்துக் கொண்டிருந்த போது அவன் தோளில் ஒரு கை பட்டது. திரும்பினன். பக்கத்து வீட்டு டிரைவர் கதிரேசன்.

''என்ன குமாரசாமி, பார்த்து ரொம்ப நாளாயிற்று, எங்கே இந்தப் பக்கம்!'' இவன் எங்கே வந்தான் பூஜை வேளையில் குருஷ்சாவ் நுழைந்தது போல்!

''அய்யாவுககுத் தெரிந்தவர் ஒருவர் வருகிருர். வண்டி கொண்டு வந்திருக்கிறேன்'' என்ருன்.

''இப்ப எந்த வண்டி வருகிறது?''

தயங்காமல் ''திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் லேட், டெலி போனில் சொன்னூர்கள். பிளாட்பாரம் டிக்கட் வாங்கப் போகிறேன். அப்புறம் பார்க்கலாம், என்ன?'' என்று கழண்டு கொண்டு பிளாட்பாரம் டிக்கட் ஒன்றை வாங்கிக் கொண்டு ஒரு வாயிலில் நுழைந்து தள்ளியிருந்த மற்ருெரு வாயில் வழியாக ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தான்.

என்ன சந்தேகத்துக்கிடமாக நடந்து கொண்டேன், சே! கதிரேசன் என்னை எழும்பூரில் பார்த்ததாக சொல்லி விடுவானே......டாக்ஸி!

பாய்ந்து டாக்ஸியில் ஏறி, ''சென்ட்ரல்'' என்ருன். டாக்ஸி விருட்டென்று ஓடித் திரும்பிச் செல்லும் போது அவனை கதிரேசன் மறுபடி பார்த்து விட்டான். அவன் தலைக்கு மேல் ஒரு கேள்விக்குறி தெரிந்தது... இதையெல் லாம் யோசிக்க இனி நேரமில்லை. முதலில் இந்த ஜில்லாவை விட்டு வெளியேற வேண்டும்.

சென்ட்ரல் நிலையத்தில் பரபரப்பில் யேலே தொங்கிக் கொண்டிருந்த ஒலி பெருக்கி விஜயவாடா, நாக்பூர், இடார்ஸி வழியாக புது தில்லி செல்லும் கிராண்டிரங் எக்ஸ் பிரஸ் இன்னும் சில நிமிஷங்களில் முதல் பிளாட் பாரத் திலிருந்து...

தில்லி! ஆம், அங்கு தான் போக வேண்டும். தலைமறை வாக இருக்கத் தலைநகரம் தான் சரி! உடனே டிக்கட் ஜன் னலுக்கு ஓடினன். சம்பளத்தில் பாதி தனியாக பாண்ட் பைக்குள் இருந்தது. அதில் 45 ரூபாய் கொடுத்து டிக்கட் வாங்கினன். அந்தப் பணம்? அது பத்திரமாக, ரத்தினமாக உறைக்குள் உறங்கிக் கொண்டு சுலபமாக பை கனத்தது. அதைத் தொட்டுக் கொண்டதும் தைரியம் பிறந்து விட் டது. தில்லிக்குப் போகலாம். மீசையை எடுத்து விடலாம்.

பாஷையை மாற்றிக் கொள்ளலாம். இருபது லட்சம் ஜனங் களுக்குள் சுவடே தெரியாமல் மறைந்து விடலாம், தப் பித்து விடலாம்...

கிளம்பிக் கொண்டிருந்த ரயிலில் தொத்தி ஏறிக் கொண்டான்.

பிட்ரகுண்டா வரை கூட அவன் படபடப்பு அடங்க வில்லை. பையில் எத்தனை ரூபாய்? பதினாயிரத்துச் சொச்சம்...

எத்தனை நோட்டுக்கள் இருக்கும்...? அந்த நோட்டுக் கத்தைகளை ஒன்று விடாமல் தடவித் தடவி எண்ணிப் பார்க்க அவன் விரல்கள் துருதுருத்தன. ரயில் வண்டியில் தனிமையான இடம் எது? அங்கு சென்று கதவைத் தாளிட் டுக் கொண்டான்.

அந்த உறையை எடுத்தான். ஓரத்தில் கிழித்தான் திறந்தான். உள்ளே சீல் வைக்கப்பட்ட மற்றொரு உறை இருந்தது. கை நடுங்கியது. ரெயில் வண்டியின் சப்தத்துக் கும் மேலாக திடும் திடும் என்று ஒரு சப்தம் கேட்டது. உன்னிப்பாகக் கேட்டதில் அவன் இதயம்! நனைந்த விரல் களால் அந்த உறையைக் கிழித்தான், திறந்தான்.

உள்ளே கத்தை கத்தையாக நூறு நூறாக நோட்டுக் கள் இருக்கும் என்றுதான் எதிர்பார்த்தான். இல்லை அழகாக அளவாக வெட்டப்பட்ட வெறும் வெள்ளைக் காகிதங்கள் தான் இருந்தன. அவற்றின் மேலாக இருந்த காகிதத்தில் எழுதியிருந்தது :

"குமாரசுவாமி, உன் மேல் நம்பிக்கை வைக்கலாமா என்று பரிசோதனை செய்யவே இப்படி செய்திருக்கிறேன். நீ நம்பிக்கையுள்ள ஆளாக இருந்தால் இந்தக் கவரைக் கிழிக்காமல் சர்க்கரை செட்டியாரிடம் சேர்த்திருப்பாய். அப்படிச் செய்யாமல் கிழித்து இந்தக் கடிதத்தைப் படித் துக் கொண்டிருக்கிறாய் என்றால் திரும்பி வரவே, வராதே, ஒழிந்துபோ!...ஆதிமூலம்."

வண்டி தண்டவாளங்களில் மாறிக் கடகட வென்று சிரித்தது......

# NEW MARCHE LAKSHMI

புதிய நிர்வாகத்துடன் JEANTALON சந்தைக்கு
அருகாமையில் அமைந்துள்ள
NEW MARCHE LAKSHMI
ஸ்தாபனத்தினர் உங்கள் தேவை எங்கள்
சேவை என்று இலங்கை இந்திய கனேடிய
உணவுப்பொருட்களையும்
உங்களுக்குத் தேவையான எல்லாவித
*பலசரக்கு வகைகள்
*அன்றாடபாவனைப்பொருட்கள்
*காய்கறி வகைகள்
எல்லாவற்றையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள

## NEW MARCHE LAKSHMI

7010 CASGRAIN, MONTREAL

**270-8120**

EAST & WEST INDIAN GROCERIES
TROPICAL FOODS, SPICES & FRESH MEAT
RETAIL AND WHOLE SALE

எங்களிடம் பழைய புதிய விடியோ திரைப்பட
கசட்டுக்கள் குளிருட்டப்பட்ட பியர் வைன்
ஆகியவற்றையும் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
மறந்துவிடாதீர்கள்! பொருட்களை மொத்தமாக
கொள்வனவு செய்யும் பட்சத்தில்
இலவச வினியோகம் செய்யப்படும்.

*01-08-1988 முதல் 20-08-1988 வரை நியூ மார்சே லக்ஸ்மி ஸ்தாபனத்தினர் இல. 000 முதல் 800 வரையிலான வீடியோ பிரதிகளை 50 சதத்திற்கு வினியோகம் செய்கிறார்கள். (36 மணித்தியாலங்கள்)*

# ஜப்னா ஸ்ரோர்ஸ்

806, Bloor St West, Toronto, Ontario. M6G-1L9
Tel: (416)534-6134

VARIOUS CHOICE OF INDIAN & SRILANKAN GROCERIES SPICES, NUTITUTIONAL FOODS CANNED VEGETABLES, FRUITE JUICE AND MANY MORE AT ECONOMICAL PRICES.

## GOOD NEWS

## JAFFNA MOVIE CONVERSION

TRANSFER VIDEO MOVIES THROUGH
NTSC <--> PAL
PAL <--> NTSC
ANY SYTEM --> ANY SYSTEM

## ARE YOU MOVING?

FREQUENT AND EFFICENT SERVICES
WITH COMPETITIVE RATES
CONTACT 534-6134
(FREE ESTIMATES)

கனடாவின் சகல மாகாணங்களிலும் வசிக்கும் எமது தமிழ் வாடிக்கையாளரின் ஏகோபித்த பாராட்டுதலுடன், அமெரிக்க வாழ் தமிழ் வாடிக்கையாளரின் பாராட்டுதலையும் ஏகோபித்துப் பெற்ற பலதரப் பட்ட சரக்கு வகைகளையும், ஏற்ற அளவு கொண்டு கலந்து தயாரிக்கப்பட்ட வறுத்த தூள் எம்மிடம் உண்டு.

$50க்கு மேல் கொள்வனவு செய்தால் இலவச விநியோகம் செய்து தரப்படும்

* STRICTLY THE BEST QUALITY GUARANTEED 22Kt GOLD, BANGLES AND ENGAGEMENT RINGS.

*UNBEATABLE LOWEST PRICES


*SPECIALIZED IN MALIYA MUTTU, PRABHA AND THALIKODI CHAINS

*WE DO MINOR REPAIRS AND ADJUSTMENT



# J.P.S. jewellers inc.

5991 VICTORIA Ave., Suit 2,
MONTREAL, QUEBEC H3W 2H6
TEL: (514) 343-5333
TELEX: MTL 05-25-134




* உத்தரவாதமுள்ள 22 காரட்டில் அமைந்த வளையல்கள், நிட்சயாச்த்த மோதிரங்கள்.

* மிகக் குறைந்த விலையில்

* தரமான மல்லிகை முத்து, பிரபா மற்றும் தாலிக் கொடி

* மற்றும் சிறு திருத்தவேலைகட்கும்

MONDAY CLOSED
TUESDAY-SATURDAY
10 A.M.-7.30 P.M.
SUNDAY
12 NOON-8 P.M.


விளம்பரமின்றி
வியாபாரமில்லை


# தமிழ்த்தென்றல்


வியாபாரமின்றி
விளம்பரமில்லை

மொன்றியால் தமிழ் நேயர்களுக்காக
பல வருடங்களாக மொன்றியால் CFMP1410
அலை வரிசையில் ஒலிபரப்பிவரும்
**தமிழ்த்தென்றல்** இனிய பாடல்கள்,
உலகச்செய்திகள், இலக்கிய விருந்து
போன்ற பல சுவையான அம்சங்களுடன்
காற்றில் மிதந்து வருகின்றது.
உங்கள் குழந்தைகளின் பிறந்தநாள்
விழாக்களை அறியத்தரவும்,
வியாபார ஸ்தலங்களை விளம்பரப்படுத்தவும்,
**தமிழ்த்தென்றல்** உங்களோடு இணைகின்றது.
நிகழ்ச்சியின விமர்சனங்களை **தென்றல்**
எதிர்பார்க்கின்றது.









# MUKESH JEWELLER



# முகேஷ்

ஜீவலர்ஸ்

தரமிகுந்த இந்திய
தங்கநகைகளுக்கும்
நங்கையர் நாடும் நவ
நாகரீக தங்க,வைர
வெள்ளி ஆபரணங்க
ளுக்கும், நம்பகரமான
ஒரே ஸ்தாபனம்.
உங்கள் தேவைகட்கேற்ப
ஆபரணங்களை அழகு
பெறத்தயாரிப்பதற்கும் புனரமைப்
பதற்கும் இன்றே நாடுங்கள்

620 கற்காட் வீதி
CATCHCART St.

320 அறை
ROOM

தொலைபேசி
TELEPHONE 861-3110